தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4	சென்னை 9-11-57 சனிக்கிழமை	இதழ் 19

★ நமது இலட்சிய நடிகர் ★



★

இன்று, ஏழைகளையும், பணக்காரர்களையும், கற்றோரையும் மற்றோரையும் மகிழ வைக்கவும், சிந்திக்கச் செய்யவும் சக்தி பெற்றதாக விளங்குவது திரைக்கலை ஒன்றுதான். அத்தகைய சக்தியை அரசியல் எழுச்சிக்கும், சமுதாய விழிப்புக்கும் பயன்படுத்த வேண்டும் என்று தி. மு. கழகம் நெடுநாட்களாகக் கூறி வருகிறது. எந்தக் கலையானலும், அது மனிதனின் அறிவு வளர்ச்சிக்கு—நல்வாழ்வுக்குப் பயன்பட வேண்டுமென்றே தி. மு. க. விரும்புகிறது.

கழகம் விரும்பும் அந்த நற்பணியை தன்னலான வரை செயல்படுத்தி வருபவர் நமது இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் ஆவார்.

"நடிகனுக்கு அரசியல் எட்டிக்காயல்ல! அவனும் பிரஜைதான்! அவனும் வரிக் கட்டுகிருன்" என்று அவர் பல இடங்களில் முழக்கமிட்டிருப்பதைத் தமிழகம் மறவாது.

இலட்சிய நடிகர் கழகத்தின் பொதுக்குழு உறுப்பினர். மதுரை மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டவர்.

★

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்
கண்ணன் காசன்
மலர் 4 || 9—11—57 || இதழ் 19

பொழிந்த மேகம் "பொக்"கென நின்றதே!

உள்ளத்தால் உடலால் வண்ண
உரையினுயில் தமிழே தந்த
வெள்ளத்தான் புலவோர் மன்னன்
வேற்படை வழியைச் சார்ந்தோன்
அள்ளித்தான் உலகுக் கீந்த
அருந்தமிழ் மணக்கும் வேளை
கொள்ளித்தேர் புகுந்தான் அந்தோ!
குவலயம் பிரிந்தான் அந்தோ!

வயல்பயிர் தேடும் மேகம்
வரத்தடை நேர்ந்தால், ஆடும்
மயில்சிறை விரிக்கா திந்த
மண்டலம் பிழைக்கா தென்றால்
கயல்பிறழ் வையைக் கோமான்
கனிந்த "கார் மேகம்" சென்றால்
இயல்இசை கூத்தில் தோய்ந்த
இன்தமிழ் பிழைப்ப துண்டோ?

உணவினை ஒழிப்பா யென்றால்
உண்பதை ஒழிப்பான்; கொண்ட
மனைவியைப் பிரிவா யென்றால்
மறுகணம் பிரிவான்; பார்க்கும்
பணியினை மறப்பா யென்றால்
பள்ளியும் மறப்பான்; உந்தன்
'கனிமொழி' இழப்பா யென்றால்
கனல்வரக் கொதிப்பான்; சென்றான்!

அன்னையே! தமிழே! உன்னை
அன்பினுல் வளர்த்தான் போனுன்!
பின்னையோர் துணையே தம்மா!
பேசவோர் மொழியே தம்மா!
உன்னையே நினைப்போ ரிந்த
உலகினைப் பிரிகின் றாரே!
தன்னையே உனக்கே தந்த
தமிழர்கள் மறைகின் றாரே!

தலைவனில் லாமற் செல்லும்
தானையோர் தானை யாமோ?
கலைஞனில் லாமல் வாழும்
கலைவளர் தல்காண் போமோ?
நிலைகுலைந் தாடும் நாட்டை
நிலைவுற வைப்பான் எங்கள்
தலைமகன் சென்றா னம்மா
தமிழுனை யார்காப் பார்கள்?

தமிழுக்கு வயதும் உண்டோ?
தமிழர்க்கும் முதுமை உண்டோ?
அமிழ்துக்கும் எல்லை உண்டோ?
அன்புக்கும் முடிநாள் உண்டோ?
தமிழ்பெற்றுத் தமிழைச் சேர்ந்து
தமிழ்காத்துத் தமிழிற் சாய்ந்த
தமிழ்நெஞ்சன் கார்மே கக்கோன்
தாளெங்கள் தலைமேல்! வாழ்க!

★ ★ ★

தமிழறிஞர் மறைவு

மதுரை அமெரிக்கன் கல்லூரி முன்னுள் தமிழ்ப் பேராசிரியரும், சிறந்த தமிழ்ப்புலவருமான திரு. ஆர். கார்மேகக் கோனுர் அவர்கள் சென்ற திங்கள் 22-ம் தேதி மாலை 5-30 மணிக்கு இயற்கை யெய்தினுர். அவரது மறைவு தமிழ்நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் பெருத்த நட்டமாகும்.

புலவரின் மரணச்செய்தி கேட்டு மதுரைத் தமிழ்ப் பிரியர்கள் அனைவரும் புலவரின் இல்லம் விரைந்து வருத்தத்தையும் இறுதி வணக்கத்தையும் தெரிவித்தார்கள். அமெரிக்கர் கல்லூரிக்கு அன்று விடுமுறை அளிக்கப்பட்டது.

இராமனுதபுர மாவட்டத்தில் அகத்தாரிருப்புக் கிராமத்தில் 1889ம் டிசம்பர் 27ம் நாளில் ஆயர்பாடிக் கோனுருக்கும் இருளாயி அம்மாளுக்கும் தோன்றியவர் புலவர் கார்மேகனுர்.

1904 ம் ஆண்டின் இடையில் பாண்டித்துரை தேவர் நிறுவிய தமிழ் சங்கத்தில் புகுமுக வகுப்பில் முதன்மையாகத் தேறி பொற் பதக்கம் பெற்ருர். 1912ல் பேராசிரியருக்கும் பத்மாசினி அம்மையாருக்கும் திருமணம் நடைபெற்றது.

1914ல் மதுரை அமெரிக்கர் கல்லூரியில் தமிழ் பேராசிரியராகப் பணியாற்றத் தொடங்கினுர். 37 ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றி 1951ம் ஆண்டு கல்லூரிப் பணியினின்று ஓய்வு பெற்ருர்.

சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப்பாடத் திட்டக்குழுவில் 21 ஆண்டுகள் தொடர்ந்து உறுப்பினராக இருந்தார்.

சென்னை, அண்ணுமலை, திருவாங்கூர் பல்கலைக் கழகங்களில் தேர்வாளர் குழுவில் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். மற்றும் சென்னை சர்விசுக் கமிசன், சென்னைப் பல்கலைக் கழக அகடமிக் கவுன்சில், மதுரைத் தமிழ் சங்கத் தேர்வுக்குழு, கல்விக்குழு, ஆலோசனைக்குழு ஆகியவற்றிலும் இருந்து தொண்டு புரிந்துள்ளார்.

பேராசிரியருக்கு 3 ஆண்மக்களும், 4 பெண்மக்களும், பேரன் பேத்திகளும் உள்ளனர்.

பேராசிரியர் கார்மேகக் கோனுர் கல்லூரி ஆசிரியர் பணியினின்றும் நீங்கி ஓய்வு பெற்றபின், நல்ல தமிழ்ப் புத்தகங்களை எழுதி வெளியிட்டும், வாய்ப்புக் கிடைக்கும்பொழுதெல்லாம் தமிழ்க் கழகங்களுக்குச் சென்று சொற்பொழிவு நிகழ்த்தியும் தமிழ்த்தொண்டு புரிந்தும் வந்துள்ளார்.

மதுரை திருவள்ளுவர் கழக 17-1-55ம் நாள் பொங்கல் அன்று தமிழவேள் திரு. பி. டி. இராசனைக் கொண்டு பேராசிரியருக்கு நாவலர் திரு. ச. சோமசுந்தர பாரதியார் தலைமையில் பொன்னுடை போர்த்தி "செந்நாப் புலவர்" என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது.

- 3 -

பாவாணரும், அவரை எதிர்த்துக் கட்டுரையாளரும் நன்னூல் மீது குற்றச் சாட்டாகவும் அதற்கு எதிர்ப்பு விளக்கமாகவும் முதன்முதல் எடுத்துக் கொள்ளும் பகுதி சார்புஎழுத்துக்கள் பற்றியது. தொல்காப்பியர் குற்றியல் இகரம் ஒன்று, குற்றியல் உகரம் ஒன்று, ஆய்தம் ஒன்று என மூன்று சார்பெழுத்துக்களையே கூறினார். நன்னூலாரோ தொல்காப்பியரின் ஒவ்வொரு சார்பெழுத்தையும் ஒரு வகையாக்கியதுடன் நில்லாது, புதுவகைகளும் சேர்த்துச் சார்பெழுத்துக்களில் பத்து வகைகளையே புதுவதாகக் கண்டுபிடித்துள்ளார். குற்றியலுகரம் ஒன்று என்பது குற்றியலுகரம் 36 ஆக நிற்கிறது. இதுபோலக் குற்றியலிகரம் ஒன்று என்பது குற்றியலிகரம் 37 ஆகிறது. அதுமட்டுமோ? தொல்காப்பியர் ஒன்று என்று கணித்த சார்பெழுத்தாகிய ஆய்தம், முற்றாய்தம் எட்டாகவும், குறுகிய ஆய்தம் 2 ஆகவும் மொத்தம் இரண்டு வகைப்பட்ட எழுத்துக்கள் ஆய்விடுகிறது. இப்படிப் பெருக்கிச் சேர்த்து அவர் சார்பெழுத்துக்களின் தொகையை 369 ஆக்கிக் காட்டியிருக்கிறார்.

நூல் மொத்தத்தை 'முண்டம்' என்று வலிந்து கண்டித்த பாவாணர் அவர்கள் கல்லையும் பொடியாக்கி இழைக்கும் ஆராய்ச்சியாளராக மட்டுமில்லாமல் மாணவராயிருந்திருந்தால், 'விழுமிய பயனின்றி மாணவர்க்கு வீணை வெறுப்பை விளைத்துள்ளார்' என்று அமைதியுடன்கூறியிருக்கமாட்டார். நன்னூலார் மீது எரிந்து விழுந்து ஒரு வசை புராணமே பாடியிருப்பார். அவரும் புலவருள் ஒரு புலவராயில்லாமல் வெறும் மொழி நூலாராய் மட்டுமிருந்தால், சமஸ்கிருத இலக்கண மரபும் அதில் காணப்படும் அறிவு நிலையும்கூடக் கெட்டழிந்த சமஸ்கிருத அடிமை ஊழியாகிய மடமைக் காலத்து மட அறிஞன் மடமைக்கு ஒரு எடுத்துக் காட்டு என்று கருதி அதைக் கண்டிக்கக் கூடப் புறப்படாமல் ஏளனமாகப் புறக்கணித்துவிட்டுச் சென்றிருப்பார். அவர் ஒரு நகைச் சுவையாளராயிருந்தால் இச்சூத்திரத்தையும் இதுபோன்ற சூத்திரங்களையும் கண்டு வயிறு குலுங்கச் சிரித்திருப்பார்.

இச்சூத்திரம் உண்மையில் நன்னூலில் மறுக்கமுடியாத, மன்னிக்க முடியாத கறை ஆகும்.

மேலை நாகரிகக் கல்வி தமிழகத்திலும் கீழ் திசையிலும் பரவிய நாட்களில் தமிழ்ப் புலவர்களும் மற்ற தாய்மொழி, சமஸ்கிருதப் புலவர்களும் பண்டிதர்கள் என்று குறிக்கப்பட்டனர். அவர்கள் புத்தகப் புழுக்கள் என்று மாணவராலும் மக்களாலும் ஏளனப்படுத்தப்பட்டனர். இது தவறான செயலே-இப்பண்பு இப்போது மலையேறிவிட்டது. ஆனால் மேற் கூறிய இந்தச்

நன்னூல் நன்னூலா?

சூத்திரத்தை நகைச் சுவையும் பகுத்தறிவும் அற்றவர்களாய் இலக்கண இலக்கியப் புலவரும் ஆசிரியரும், உரைகாரரும் விளக்க உரைகாரரும் தாமும் ஏற்று மாணவர்கள் மண்டையிலும் குத்தியிருத்துவதற்காக அவர்களையும் படாத பாடு படுத்தித் தாமும் உருவிட்ட இரும்புக் குண்டுகளாகி வந்திருக்கின்றனர் என்று எண்ணும் போது, அக்கால ஏளனம் அவ்வளவு தவறானதல்ல என்று கூடக் கருதலாகும். ஆனால் நன்னூலாரைப் போலவே அவர்களும் அடிமைக் காலத்தின் அடிமைச் சின்னங்கள் என்று விடத்தகும். அவர்கள் 'குற்றவாளிகளல்ல,குற்றத்துக்கு ஆட்பட்டவர்கள்' என்னலாம்.

கா. அப்பாதுரையார்

கட்டுரையாளர் பாவாணரின் மட்டான கண்டனத்துக்குக் கூறும் பதிலைக் காண்போம்.

நன்னூலார் ஒன்றொழி முந்நூற்று எழுபான் (370-1-369) என்று கூறிவிடவில்லை. ஒன்றொழி முந்நூற்று எழுபான் என்ப என்று அதைப் பிறர் கூற்றாகவே கூறியதை அவர் எடுத்துக் காட்டுகிறார். 'தொல்காப்பியத்துக்குப் பின்பும் நன்னூலாருக்கு முன்பும் இருந்த இலக்கிய ஆராய்ச்சி யுலகம் இச்சார்பெழுத்தை மேலும் விரிவாக ஆராய்ந்து தம் இலக்கியங்களில் கையாண்டு காட்டின' என்பதும் அவ்விலக்கிய விரிவு பின்பற்றியே இலக்கண விரிவு கண்டார் நன்னூலார் என்பதுமே அவர் மறுப்பு விளக்கம்.

இது மறுப்பும் அல்ல, விளக்கமும் அல்ல. குளறுபடிக்கு ஆதாரமான மற்றொரு குளறுபடி. நன்னூலுக்கு முன்போ பின்போ உள்ள எந்த இலக்கியத்துக்கும் இந்தப் 'பத்து வகை' விரிவோ, அவ்விரிவின் விரிவாகிய 369 சார்பெழுத்துக் கணிப்போ தேவைப்படுமென்று யாரும் காட்டமுடியாது. இடங்கருதி ஒலி வேறுபடாத சார்பெழுத்துக்களை, இடங் கருதிப் பல எழுத்துக்களாகக் கணிக்கவேண்டுமானால், இடங் கருதி ஒலி வேறுபடும் வல்லெழுத்தாறையும் 18 என்று கூறுவது இன்னும் இன்றியமையாதது ஆகுமன்றோ? மேலும் பாவாணர் அவர்களே காட்டியுள்ளபடி,எழுத்துக்களில் முதல் நடு இறுதி இட இலக்கண வரையறை வகுத்தவர் தமிழர்மட்டுமே. அதன்படி ஒவ்வோர் எழுத்தையும் மூன்றிடங்களின் சார்பில் மூன்றாகக் கணித்திருக்க வேண்டுமே! இப்படிக் கணித்திருந்தால், அது குற்றியலிகர, குற்றியலுகரக் கணிப்பைவிடப் பயனுடையதாகக்கூட இருந்திருக்கும். ஏனெனில் முதலில் வரும் எழுத்துக்கள் இவை என்பதுமட்டுமல்ல, முதலில் மட்டுமே வருபவை, முதலிலும் ஈற்றிலும் வருபவை, முதலிலும் ஈற்றிலும் இடையிலும் வருபவை என்பதுபோன்ற வேறுபாடுகளை அவை குறித்துக் காட்டியிருக்கும்.

நன்னூலாரின் கேலிக்குரிய இம்முயற்சிக்கான உண்மைக் காரணம் தொகை வகை விரியல்ல; அவர் நுணுகிய அறிவுமல்ல, விரிந்த அறிவுமல்ல. அவர் அறிவும் சரி, அவர் காலச் சமஸ்கிருதப் பற்றாளர் அறிவும் சரி, எப்படியாவது சமஸ்கிருதத்தின் படிவத்தைத் தமிழில் பொறிக்க விருவிருத்தது. சமஸ்கிருதத்தில் 'க்க' ஒரு எழுத்து, க்ய, க்ர; க்த ஆகியவை எல்லாம் எழுத்துக்கள். இப்படி இரு மெய்களைச் சேர்த்துக் கூட்டெழுத்துக்களாகக் கருதுவதால், எழுத்துக்கள் உண்மையில் வானத்து மீன்களை விடப் பலவாகின்றன. சமஸ்கிருதப்பன்றியிட்ட குட்டியே தமிழ் என்ற முடிவுக்குத் தமிழரைக் கொண்டு வரப் பாடுபட்ட அக்காலச் சமஸ்கிருதப் பற்றாளர் தம்மால் இயலுமட்டும் தமிழிலும் செயற்கை முயற்சியால் எழுத்துக்களைப் பெருக்கி, இலக்கணத்தைச் சிக்கலாக்கி, இடர்ப்பாடுமிகுவித்துச் சமஸ்கிருதப் பண்பைத் தமிழுக்கு ஊட்டிவிட முயன்றனர்.

இச்சூத்திரத்தின் குளறுபடியையும், அதனைப் பின்பற்றி நம் நாட்கள்வரை தமிழ் உரையாசிரியர், புலவர் உலகில் ஏற்பட்டுள்ள குளறுபடியையும் நாம் நன்கு மதிப்பிட்டறிய வேண்டுமானால், இவர்களை மட்டுமன்றிப் பாவாணர் இக்கட்டுரை வாதத்தில் கூறும்பலமற்றையும் கடந்து தொல்காப்பியத்துக்கே நேரடியாகச் செல்ல வேண்டும். ஏனெனில் அவ்வாறு செய்யாவிடில் ஆய்த எழுத்துப்பற்றிய அடுத்த வாதத்தில் பாவாணரின் உட்கோள் எதிர் தரப்பாருக்கு முற்றிலும் விளக்கமடையாது.

தொல்காப்பியர் உண்மையில் சார்பெழுத்துக்களை எழுத்துக்களில் சேர்க்க விரும்பவேயில்லை என்பதை எழுத்தியல் முதற் சூத்திரங்களின் போக்கே காட்டும்.

எழுத் தெனப்படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃ தென்ப,
சார்ந்து வரல்மரபின்
மூன்றலங் கடையே

என்பது முதல் சூத்திரம். இதில் தம் கோட்பாடாகத் தமிழ் எழுத்து முப்பது என்று அவர் முடித்துவிட்டார். பின் பிறர் கோட்பாடும் ஏற்பவர்போல

ஆசிரியர் கண்ணதாசன் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்

பன்மொழிப்புலவர் அப்பாதுரையார் அவர்களின் நிதிபற்றிய அறிக்கை, நமது கழக ஏடான 'நம் நாடு' இதழில் அடிக்கடி போடப்படுகிறது. கழக வார இதழ்களிலும் பிரசுரிக்கப்படுகிறது. அதற்கெல்லாம் பலன் இல்லாமலில்லை. தொகை வந்துகொண்டிருக்கிறது. சிறுகச் சிறுக வருகிறது. ஆனால் காலமோ ஓடிக் கொண்டிருக்கிறது. நிதியைக் கூடிய விரைவில் கொடுத்து பன்மொழிப்புலவரின் கஷ்டத்தைத் தீர்க்க வேண்டாமா? அதற்கொரு ஏற்பாடு.

வருகின்ற சனவரித் திங்கள் 15ம் தேதியிலிருந்து 31ம் தேதி முடிய-17 நாட்கள் பன்மொழிப்புலவர் நிதிச்சிறப்புக் கூட்டங்களுக்காக ஆசிரியர் கண்ணதாசன் தேதிகள் ஒதுக்கியிருக்கிறார்.

சுற்றுப்பயணம் தஞ்சை மாவட்டத்தில் தொடங்க இருக்கிறது.

சனவரி 15-காலை கும்பகோணம்
,, மாலை திருப்பனந்தாள்
,, 16-காலை மன்னார்குடி

—இதையொட்டி சிறப்புக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்ய விரும்பும் தோழர்கள் கடிதமூலமோ, நேர்முகமாகவோ ஏற்பாடு செய்துகொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலே குறிப்பிடப்பட்டுள்ள 17 நாட்களில் சிறப்புக் கூட்டங்களில் மட்டுமே கலந்துகொள்ள நேரிடும். கூடிய விரைவில் நிதி சேர்க்கும் எண்ணத்தாலேயே இந்த ஏற்பாடு. தோழர்கள் மன்னிப்பார்களாக.

ஒருசார் ஏற்புத் தெரிவிப்பவர் போல, 'இன்னும் மூன்று உண்டு, அவற்றைச் சேர்க்கவும் செய்யலாம். சேர்க்காவிட்டால் தான் முப்பது' என்று குறிக்கிறார்.

தொல்காப்பியர் கால மொழி நூல் மரபும், நுண்ணறிவு நிலையும் இங்கேதான் புலப்படுகிறது. பாவாணருக்கு முன்னிருந்த பெரும் பேரறிஞர் பா. வே. மாணிக்க நாயகர் இதை அரிது விளக்கியுள்ளார். ஊன்றிக் கவனித்தால் அவர் விளக்கம் ஒன்றே தொல்காப்பியர் உட்கோள் என்பது தெரியவரும்.

சார்பெழுத்துக்களில் தொல்காப்பியர் ஆய்தத்தை மட்டுமன்றி, உகரக்குறுக்கத்தையும் இகரக்குறுக்கத்தையும் சேர்த்துக்கொண்டார். அவர் காலத்திலேயே ஆய்தக்குறுக்கம், மகரக்குறுக்கம் ஆகிய பிறகுறுக்கங்களும் உண்டு. குற்றியலுகரம் பின்னும் குறுகுமிடம் உண்டு என்றுகூட அவர் கருதினாராதல் கூடும். 37-வது சூத்திரத்துக்குப் பாவாணரும் பிறஉரையாசிரியர் பலரும் கொண்ட பொருள் இதுவே. ஆனால் இந்தக் குறுக்கங்கள் எவையும் சார்பெழுத்துக்களில் சேர்க்கப்படவில்லை.

குறுக்கங்கள் தனி எழுத்துக்களாக எண்ணப்பட்டால், அளபெடைகளும் அவ்வாறு எண்ணப்படலாமே? நன்னூலார். அவ்வாறே அவற்றைச் சேர்த்துக் கொள்ள எண்ணினர்! தொல்காப்பியர் அவற்றை எண்ணாது விட்டது கவனக்குறைவா? அல்லது புலமையாராய்ச்சியாளர் குறிப்பது போல, நன்னூலார் கால இலக்கண முன்னேற்றமா?

பிற குறுக்கங்கள் அளபெடைகள் ஆகிய எவையும் சார்பெழுத்துக்களாக எண்ணப்படாமல், குற்றியலுகரம், குற்றியலிகரங்களும் மட்டும் எண்ணப்படுவானேன்?

இவ்வினா எழுப்பியவரும் விடை கூறியவரும் அறிஞர் பா. வே. மாணிக்க நாயகர் ஒருவரே. மற்றக் குறுக்கங்கள் அளவுக்குறுக்கங்கள், மாத்திரைக் குறுக்கங்கள் மட்டுமே, வல்லெழுத்தும் பிறஉயிர்க்குறில்களும் பொருள் மாறுபாடின்றியே இடஞ்சார்ந்து அளவிலும் முயற்சியிலும் கொள்ளும் திரிபுகள் தனிஎழுத்தாகத் தமிழிலோ, பிற உலக மொழிகளிலோகூடக் கருதப்படாததுபோலவே, இக்குறுக்கங்களும், இவற்றுக்கெதிரான அளபெடைகளும் நன்னூலாரால் சார்பெழுத்துக்களாகக் கொள்ளப்பட்டது போலத் தொல்காப்பியரால் கருதப்படவில்லை. ஆனால் குற்றியலுகரமும் குற்றியலிகரமும் சார்பெழுத்தாக எண்ணப்பட்டதன் காரணம், அவை அளவுக் குறுக்கம், முயற்சிக்குறுக்கம் மட்டுமல்ல. அவை ஒலித்திரிபுகள் என்று தொல்காப்பியரால் கருதப்பட்டன வாதலாலேயே. இக்குறுக்கங்கள் ஒலித்திரிபுகள் மட்டுமல்ல, தனி ஒலிகள் என்று கூடக் கருதப்படலாம். ஏனெனில் அதே ஒலிகள் பிரஞ்சு மொழியிலும் (petite பெதிது — குற்றியலுகரம்) ஆங்கிலத்திலும் (able ஏபிள் — குற்றியலிகரம்) தனி ஒலிகளாகவே கருதப்படுகின்றன.

தவிர, இக்குறுக்கங்கள் வெறும் ஒலி மாறுபாடுகள் மட்டுமல்ல, அவை பொருள் மாறுபாடும் உடையவை. கட்டு, சுட்டி யாது என்பவை குறுக்கங்களாகுங் கால் வேறு பொருள் தருவது காண்க. இம்மாதிரிப் பொருள் வேறுபாடு மற்றக் குறுக்கங்கள், அளபெடைகளில் கிடையாது. 'இம்மை மறுமைக்கு அரசு' என்ற வாசகத்தில் ஐகாரக் குறுக்கமும் பொருள் வேறுபடு மானாலும், அது புணர்ப்புப் பிரித்தல் மாத்திரமான சிலேடையே என்று காணலாம்.

தொல்காப்பியர் ஒலிநோக்கி இக்குறுக்கங்களையோ, ஆங்கிலத்தையோ கூட முற்றிலும் தனி எழுத்தாகக் கருத விரும்பவில்லை.

மேலே முதற் சூத்திரத்தில் கண்டோம். இதற்கு அறிஞர் பா. வே. மாணிக்க நாயகர் சுட்டிக் காட்டும் காரணம் புதுப்மைச சுவையுடையது; தமிழ் புலவர், அறிஞர் மட்டுமல்ல, உலக அறிஞரே சிந்தித்துக் காணத்தக்கது.

இந்த மூன்று எழுத்துக்களுமே தனி ஒலிக்குறியீடுகள், ஒலித்திரிபுக் குறியீடுகள் என்று மாணிக்க நாயகர் பல ஆண்டுகட்கு முன்னே நுனித்துணர்ந்து கூறியது வியத்தகு செய்தி ஆகும். ★

அடுத்த இதழில்

நன்னூல் நன்னூலா?

என்னும் தொடரில்

ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின் கட்டுரை வெளிவரும்!

ஏஜெண்டு தோழர்களுக்கு

நவம்பர் முல்லை குறிப்பிட்ட பிரதிகளே அச்சாகியிருக்கிறபடியால் அதிகப் பிரதிகள் கேட்டு எழுதிய தோழர்களுக்கு அனுப்ப இயலாத நிலையில் இருக்கிறோம். டிசம்பர் முல்லை அதிகப் பிரதிகள் தேவைப்படுவோர் தகுந்த முன்பணத்துடன் நவம்பர் 20 க்குள் தெரிவிக்க வேண்டுகிறோம்.

நிர்வாகி
"முல்லை".

இரவு வந்தது; இளங்கொடி பறந்தாள்!

"தோழி......"

"தலைவ......!"

"என் ஆருயிரனையாள் காதலியினை நான் ஆசைதீரக் காண வந்தேன். பிடியுலவும் பெருமலை கடந்து, பொடிசுடும் பாலையில் நடந்து வஞ்சிக் கொடியிடையாள் மலர் முகத்தைக் காண ஓடோடி வந்தேன். ஆனால் நின் தலைவியோ தான் வராது உன்னையனுப்பினள். ஏதென்னவோ யானறியேன்..."

"தலைவ! கூண்டிலேயிட்ட பறவை கண்டதுண்டோ?"

"தோழி! என் நிலையறிந்து நீயும் இரங்கலையோ? யான் கிளி மொழியாள் வராத காரணங் கேட்கின்றேன். நீயோ கிளியைக் கண்டதுண்டோ? கூண்டைக் கண்டதுண்டோ? என்கிறாய்.

"சற்றே பொருங்கள்! ஒரு கிளி. அழகான கிளி. பார்த்தவர் ஆசை கொள்ளும் பச்சைக்கிளி. அது பிறர் பார்வையில் பட்டு பிறருள்ளத்திலே காதலை விதைத்துவிடாமல் இருக்கவேண்டுமேயென்று அதன் தலைவிக்குக் கவலை. பிறருக்குக் காமமூட்டுவதால் அதன் கற்பின் தரம் குறைந்துவிடுமேயென்ற துக்கம். ஆதலால் அதனை வெளியே சிறகடித்துச் செல்லவிடவில்லை. அழகான பொற்கூண்டு ஒன்று அமைத்து, அதைச் சுற்றிலும் திரைகளை இட்டுப்பொன்னும், மணியும், பூவும் சூட்டி அலங்கரித்து, அக் கூட்டில் அடைத்துவைத்தனள்.

தலைவன் புரிந்துகொண்டான்; தோழி வேடிக்கை பேச வரவில்லை. வேதனையைக் கூற வந்திருக்கிறாள் என்று. தானும் அவளைப் போன்றே குறிப்பால் முழுச் செய்தியையும் அறிய வேண்டுமென்றெண்ணினன்.

"கிளியின் நிலையாதோ?"

"கிள்ளை மெலிகின்றது. கானகத்திலே காத்திருக்கும் தன் காதலனை எண்ணித் துடிக்கின்றது. புசிப்பன புசிப்பதில்லை. "மரகதங்கள் மாணிக்கங்கள் எல்லாம் மண்ணாய் போகட்டும். என் மன்னவனை யான் காணல் என்றோ?" என்று மயங்குகின்றது."

"தலைவியிடம் வேண்டிக் கிளியைப் பெற்றாலோ...?"

"இயலாது ஐய! தலைவிக்கு இருப்பதோ அஃது ஒரே கிள்ளை. அதனைத் தங்களுக்களிக்கவோ ஓரணுவும் ஒருப்படாள்."

"ஐயகோ! யான் என் செய்வேன்? கிள்ளையின்றேல் என் உடற்கூண்டிலிருந்து உயிர்க்கிள்ளையும் நீங்கிவிடும். இதனை நின் தலைவிக்கு உணர்த்திவிடு."

"மன்னவ! மானனையாள் குதித்து வரத்துடிக்கின்றாள். மங்கையின் தாயோ அவளைத தாங்கள் மணப்பதற்குடன்படாள். ஆதலின் மை தீட்டிய நீள் விழிப்பாவை, எம்மடந்தையை நீவிரே நின்னகர்க்கு அழைத்துச் செல்மின்."

தலைவன் அயர்ந்தான். "யாது கூறினை நீ தோழி? பகைஞரும் மிதித்தற்கரிய கானகத்தில் கன்னியுடன் யான் தனியே எவ்வாறு செல்வேன்?"

"ஓ...! ஓ...! மறந்தேன். தாங்கள் இவ்வளவு ஆற்றலற்றவரென்றும் அறியாது நின்றேன்! ஆயின் எம்தலைவியோ போக்கிடமற்றாள்."

"ஆ...தோழி! இன்னும் நீ என்னை அறிந்திலை. ஆற்றலற்றவரென்று இழித்தனை. ஆற்றலற்றவன் அன்று நான் பட்ட மரம்கூட நிழல் தராத பாலை அது. நஞ்சினும் நெருப்பினும் மிகக் கொடியது. அதன் சூடு. அதன் நடுவே குளிர் முகத்தாள், கோல மதிமுகத்தாள், பஞ்சன்ன சீரடியாள் பாவையிவள் நடப்பளோ என்றே பயந்தேன்... நன்று. சென்று நின்தலைவியை அழைத்து வா. யான் இன்றே அவளை என்னகர்க்கு அழைத்துச் செல்வேன்.

"நன்று தலைவ! மிக நன்று" தோழி மகிழ்ந்தாள்.

"துயருற்று வாடும் தலைவி துணைவனுடன் சென்று எங்கேனும் வாழட்டும் அதுபோதும் எந்தனுக்கு" என்றாள். ஓடினாள்.

★

"சேடி..."

"அம்மா..."

"நான் காணா நிற்கும் என் நாயகனை நீ கண்டனையோ?"

"கண்டேனம்மா."

"ஆ...! நீ பாக்கியவதியே! நெடிதுயர்ந்த பெருந்தோளும், நீள் கருணைப் பார்வையும் கொண்ட அந்த ஆணழகரைக் கண்டவர்கள் எல்லோரும் நல்லவர்களே. யான் மட்டும்தான் இந்தக் கம்பிகளில்லாச் சிறையில் காலங்காலமாய் காத்து நிற்கின்றேன்...தோழி' அவரென்னைப் பற்றி யாதேனும் கேட்டாரா?"

"இல்லையம்மா...எதுவுமே கேட்கவில்லை."

"...என்ன? அவ்வளவு கல்நெஞ்சுள்ளவராக எப்போதடி மாறினார்?"

"...அம்மா! நீரொழுகும் கண்களைத் துடைத்துக்கொள் நின்னைப் பற்றிக் கேட்பதற்குக்கூட நாவெழாத நிலையில் அவர் துக்கத்தில் அடிபட்டுள்ளார்."

"...என்ன அடிபட்டுள்ளாரா?"

"ஆம் அம்மா!"

"...எங்கேயடி?"

"...இதயத்தில் அம்மா! காதல் அடி!"

"...அப்படியா!"

"...ஆம் அம்மா! தாங்கள் அவரை விட்டுப் பிரியாதிருந்து பணி செய்தால்தான் அஃது ஆறுமாம்."

"...அஃது எங்ஙனம் முடியும்?" சேல்விழியாள், செங்கதிரனையாள், சிந்தனை தேங்கியவளாய்க் கேட்டாள். நட்பினிலினியாள் நற்றோழி நவிலலானாள்.

"அம்மா! வாழ்வு பெரியது. வாழும் பருவமடைந்தவள் நீ. அவரோ வாலிபர். வதுவையினால் நீங்கள் ஒன்று சேராத நிலையில் அவர் யாது செய்வார்? வரைகள் சூழ்ந்த தன் நாட்டிற்கு அழைத்துச் செல்லவே எண்ணியுள்ளார்.

"...என்ன?" தலைவி திடுக்கிட்டாள். சிந்தித்தாள். அவளையுமறியாது அவள் வாய் பேசிற்று.

"...தோழி! நம்மரசர் தஞ்சைவாணரைத் தெரியுமா உனக்கு?"

"தெரியுமம்மா...அவரை உறவாக எண்ணிவரும் மற்ற மன்னவர்கள் ஓங்கி நிற்கின்றார். அதிலென்ன ஐயம்?"

"அவருடைய பகைவரோ போரிட்டுத்தோற்றுத் தம் உயிரைக் காப்பாற்ற வெட்கமின்றி ஒளிந்து வாழ்வதுபோல் நானும் என் தலைவரும் நாணமழிந்து வாழ நேரிடுமல்லவா? அதைக் காணும் நிலையில் இவ்வுலகில் பெண்ணாய்ப் பிறப்பது மட்டும் செய்யத்தகாத செயல் என்றே தோன்றுகின்றது."

"அம்மா...நீ கூறுவது..."

"...,..விளங்காமலிருந்திருக்காது தோழி! தலைவனுடன் உடன் சென்ற பெண்டிரைப் பற்றி உலகம் இழித்துரைப்பது நீ அறியாததன்றோ? அங்ஙனமே யான் சென்றக்காலும் இழித்துரைக்குமன்றோ?" தலைவி விம்மினாள். தலைவன் பின்னே செல்ல இதயம் தயங்கவில்லை. ஆனால் தாய் தந்தையர்க்கேற்படும் இழிவு......அதைத எண்ணும்பொழுதே அவளுக்குக் கசந்தது.

தோழி பார்த்தாள். நாணத்திற்கிரங்கி அழும் தலைவியைத் தேற்றுவதெப்படி? உருக்கமாக எடுத்துரைக்கத் தொடங்கினாள். "அம்ம.. நீ கூறுவது உண்மையே. பெண்ணுக்கு நாணம் அவசியமே. ஆயின் அஃது ஒரு தலைவனைக்கூடா நிலையில்தான். தலைவனுக்கு உன்னை ஆளாக்கிய பின்னர் உனக்கு நாணம் பெரிதல்ல. கற்பு பெரிது. கற்பின்றேல் பொற்பிலலை. பொற்பின்றேல் நாணமில்லை. இதனை நீ உணரவில்லையா?"

கூர்ந்து கேட்டாள் தலைவி. மனதில் பெரும் போராட்டம். இறுதியிலே தேறினாள். "உண்மைதான் தோழி! எனக்கு என் கற்பன்றி வேறெதுவும் பெரிதல்ல. என் காதலரன்றி வேறெதுவும் பெரிதல்ல. எனவே. தீர்மானித்துவிட்டேன்."

"எதையம்மா...?"

"என் காதலருடன் இக்காடு விட்டுப் புறப்பட..."

தோழியின் கண்களிலே ஆனந்தக்கண்ணீர். மகிழ்வோடு தலைவியை அணைத்து ஆசிகூறச் சென்றாள் அவள். இடையிலே திடீரென ஒரு நினைவு. ஒரு நடுக்கம். "அம்ம! நீ செல்லும் பாதையிலே பாலையொன்றுண்டு. பாலை வழியிலே உன் காலை வைப்பின்......"

"...மாலை மாலையாய்க் கண்ணீர் வரும் என்கின்றனையோ தோழி! வில்லொத்த புருவம் கொண்டவளே! நீயே சொல். நம் அன்னை எவ்வளவு கொடியவர்கள். என் ஆள்பவனை யான் காணவிடாது தடுத்தவர்களன்றோ அவர்கள்? அவர்களைப் போன்றவர்கள் நிறைந்திருக்கும் இந்த வீட்டை விடவா பாலைநிலம் என் காலைச் சுட்டுப் போகின்றது?" தலைவி சிரித்தாள். மலர்ந்த முகத்தினளாய், மனவுறுதியுடன் பேசினாள். அது கண்டு தோழியும் மனந்தேறினாள்.

★

இரவு எல்லோரும் அயர்ந்து உறங்குகின்றனர். தோழியும் தலைவியும் இன்னும் உறங்கவில்லை. உறக்கத்திற்கிடமேயில்லை. எங்கோ மணியோசை-இடையாமத்து மணியோசை தோழி மெல்ல எழுந்தாள். தலைவி துள்ளியெழுந்தாள். மெல்ல பின்புறக் கதவைத் திறந்தாள் தோழி. அங்கே விரிந்து, பரந்து மரத்தின் நிழலிலே நின்றிருந்தான் காளை. மங்கை நல்லாளின் மென் கையைப் பிடித்து அவன் கரத்திந்த தோழி சற்றே அசையாது நின்றாள். பிறகு கூறினாள். "தலைவ! இதோ எம்தலைவி. இப்போது முதல் நீங்கள் எங்கு செல்கின்றீரோ அங்குத் தங்கள் காலடி வழி நடந்து வருவாள் அவள். யான்தான் தனியானேன். நன்று சென்று வருக. நலமெலாம் பெற்று வாழ்க!" என வாழ்த்தி விடைகொடுத்தாள். தலைவனும், தலைவியும் பலதிறப்பட்ட உணர்ச்சிகளால், பேச நாவெழாதவராய் இருளினூடே நடந்துசென்று... அவர்கள் செல்வதைப் பார்த்திருந்த தோழி, பகலவன் தோன்றும் நேரம் நெருங்குவதறிந்து படுக்கைக்குச் சென்றாள்.

பொழுது விடிந்தது. கதிரவனின் பொன்னொளி எங்கும் பரவியது. "இந்நேரம் காட்டு வழி நடந்து கடும்பாலை கடந்திருப்பர்." என்று கணக்கிட்டவாறே எழுந்தாள் தோழி. தலைவியின் செவிலியும், தலைவியைக் காணச் சென்றாள். தலைவியைக் காணோம்.

மஞ்சத்தில் தூவியிருந்த மென் மலர்கள் கசங்கவில்லை. மல்லிகை மலர்ந்து மணம் பரப்பி நின்றது. இரவு முழுதும் மஞ்சம் துயில்பவரின்றி இருந்துள்ளது. என்பதை ஊகித்தாள் செவிலி. இரவு துயிலாவிடில்......ஏதோவொன்று நிகழ்ந்துள்ளது. என்பதும் அவள் மனதிற்பட்டது. வீடு, வாசலில், வெளிமுற்றம், உள்முற்றம், புறக்கடை, எல்லாவிடமும் சுற்றினாள். அப்பொழுதுதான் முதல்நாள் தலைவி பிரிந்த மரத்தடியே தனியே நின்று ...ய தோழியைக் கண்ணுற்றாள். அவளருகே சென்றாள். ஆராததுயரத்தோடுவினவலானாள்.

"மகளே! நலம் நிறைந்த நம் சுற்றத்தாரும், நீயும், நற்றாயோடு நானும் புலம்பி வாட சிற்றிலும், பேரிலும் கட்டி விளையாடிய சிலம்பணிந்த என் சின்னஞ்சிறு மகள் எங்கே தனியாகச் சென்றாள். உனை விடுத்து ஒருக்காலும் தனியே சென்றதில்லையே!"

அழுகைக்குரலில் அவள் அரற்றியது கண்ட தோழி மனமிரங்கினாள். "அம்ம, நின்மகள் பாலிகையல்ல. பருவமங்கை. அவள் ஆளொருவனைத் தேர்ந்தெடுத்தனள். அவனுக்கு அவளை மணமுடிக்க நீங்களெவரும் ஒப்பவில்லை. எனவே......எனவே......அவள்... அவள் தன் கற்பே பெரிதென்றெண்ணி கடுஞ்சுரத்தின் வழியே காளையின் பின் சென்றனள்" எனக் கூறித் தலை கவிழ்ந்தாள்.

'நஞ்சைவாணன் கோவை'யில் ஒரு நிகழ்ச்சிச் சித்திரம் இது.

[ஆ-ர்.]

— 10-ம் பக்கம் —

இதுதான் திராவிடநாடு

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் எம். ஏ., எல். டி.

7

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியிலே இந்தியா ஒரு தனித் தேசிய இனமாகவோ, ஒரு தேசிய உறுப்பாகவோ, ஒரு தேசியக் கூட்டுறவாகவோகூட இடம் பெற்றிருக்கவில்லை. இதைப் போலித் தேசியப் போர்வைப் போர்த்த பாரத பக்தர்கள் மறந்திருக்கக் கூடும். அல்லது மறந்துவிட்டதாகப் பாவிக்கக்கூடும். தெரியாதவர்களாக, நினையாதவர்களாகக்கூட நடித்து மறைக்கக்கூடும் ஏனெனில் மறதியும்மறைப்பும் இவ்வகையில் அவர்களுக்கு ஆதாயமானது.

சில காரியச் சமர்த்தரான வணிகர் உண்டு. அவர்களுககுக் கடன் கொடுத்தவர்கள் வரும் சமயங்களில், தம் கண்கள் அரைகுறைப் பார்வையுடையவை என்பது அவர்கள் நினைவுக்கு வந்துவிடும். தம் செவிகள் கிட்டத்தட்டச் செவிடு என்பதையும் அச்சமயம் அவர்கள் மறந்துவிடமாட்டார்கள். ஆனால் கடன் வாங்கியவர்கள் நெடுந் தொலைவில் சென்றால்கூட, அவர்கள் கண்கள் கழுகுக் கண்களாகவும், செவிகள் பாம்புச் செவிகளாகவும் செயல்படத் தயங்கமாட்டா. டில்லி ஏகாதிபத்திய வாதிகள் இந்தக் கலையைக் கரைகண்டவர்கள். அவர்கள் வேண்டும்போது, ஆதாயம் குறிக்கொள்ளும்போது, குருடாக, செவிடாகமட்டுமல்ல— பார்வை என்ற ஒன்று, ஓசைஎன்ற ஒன்று இருப்பதையே அறியாதவர்களாக நடிக்க, நடக்கத் தொடங்கி விடுவர்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மிகப் பெரிய, ஆனால் துண்டு துண்டாக, உலகெங்கணும் சிதறிக் கிடந்த ஓர் உருவிலாப் பரப்பு. பெயரளவில் அதன் தலைமையிடமாக விளங்கிய பிரிட்டனே அதன் ஒரு மூலையில், உலகிலே ஒதுப்புறமான ஒருகோடியில் உள்ளது. எனவே அதன் ஒரு பெரும் பரப்பாக, நடு நாயக மைய அங்கமாக, பிரிட்டிஷ் ஆட்சியாளர் ஒரு புதுவகை ஏகாதிபத்தியத்தையே உருவாக்கினர். அதுவே இந்திய ஏகாதிபத்தியம் (**Indian Empire**). அது பெயரளவில், கொள்கையளவில் பெரிய ஏகாதிபத்தியத்தின் ஓர் உறுப்பானாலும், உண்மை நிலையில், செயலளவில், தானே ஒரு ஏகாதிபத்தியமாக. ஏகாதிபத்திய அங்கமாக அமைந்ததுடன், உருவிலா ஏகாதிபத்தியத்தின் உருவுடைய ஏகாதிபத்திய உடலாகவும் நிலவிற்று. உருவிலா ஏகாதிபத்தியம் உலகில் பாதியானால், இந்த உருவுடைய ஏகாதிபத்தியம் அவ்வுருவிலா ஏகாதிபத்தியத்தில் பாதிக்கு மேலாகவும், உலகில் ஒரு மாபெரும் பகுதியாகவும் இருந்தது. அத்துடன் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வலிமை,வளம் இதயம், உயிர் நாடியாகஅது இயங்கிற்று.

இக்காரணங்களால் பிரிட்டிஷார் அடிக்கடி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே மறந்து, இந்திய ஏகாதிபத்தியத்தையே தம் ஆட்சிக்குரிய பெருமையாகக் கொண்டனர். ஏகாதிபத்தியம் என்று அவர்கள் கூறும்போது, இந்திய ஏகாதிபத்தியமே அவர்கள் மனக் கண்முன் வீறுடன் நின்றது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முடிசூடிய தலைமையைக் குறிக்க அவர்கள் வழங்கிய தொடர் இதைக் காட்டுகிறது. அவர் பிரிட்டிஷ் சக்கரவர்த்தி என்றோ, பிரிட்டனின் சக்கரவர்த்தி என்றோ அழைக்கப்பெறவில்லை. பிரிட்டனின் மன்னர், இந்தியாவின் சக்கரவர்த்தி என்றே அழைக்கப் பெற்றார். பிரிட்டனுக்கோ, வேறு எந்தப் பகுதிக்கோ அவர் சக்கரவர்த்தியல்லர், மன்னரே! இந்தியாவுக்கு மட்டுமே—இந்தியா தேசத்துக்கல்ல, அப்படி என்று பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலோ அல்லது வேறு எக்காலத்திலோ இருந்ததில்லை—இந்திய ஏகாதிபத்தியத்துக்குமட்டுமே அவர்ஏகாதிபத்தியத் தலைவர் அல்லது சக்கரவர்த்தியாகக் கருதப்பட்டார். அத்துடன் இந்திய ஏகாதிபத்தியத்தின் தலைவர் ஒருவர் மட்டுமே அரசப் பிரதிநிதி(**Viceroy**) என்ற தனிப்பெருமை வாய்ந்த பட்டத்துக்கு உரியவராயிருந்தார். அவருக்குத் தரப்பட்ட மதிப்பும், அவர் வாழ்க்கை ஆரவாரமும், அவர் கொலுமண்டப ஆடம்பரமும், ஊதியமும் சம்பளப்படிகளும் அதிகாரங்களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு உள்ளோ, வெளியிலோ உலகில் வேறு எங்கும் எவருக்கும் அளிக்கப்படாதவையாய் இருந்தன.

இந்திய ஏகாதிபத்தியத்தின் முதல்வரே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் முதல்வராக, உலகத்துக்கும் முதல்வராக விளங்கினார். அவர் ஆட்சிப்பரப்புஏகாதிபத்தியத்திற்குள் ஒரு குட்டி ஏகாதிபத்தியமாக, உலகத்தில் ஒரு குட்டி உலகமாக இயங்கிற்று என்பதை இது தெளிவுபடக் காட்டுகிறது.

இந்திய ஏகாதிபத்தியம் என்று பிரிட்டிஷ் ஆட்சியில் அழைக்கப்பட்ட பரப்பு இன்றையபாரதத்தை- இந்தியக் கூட்டரசை- மட்டும் உட்கொண்டதல்ல. இன்றைய கிழக்கு, மேற்குப் பாகிஸ்தான்கள் இரண்டையும் அது உள்ளடக்கியது. இவை மட்டுமன்று. இன்றைய இலங்கையும் பர்மாவும், ஏடனும் சிங்கப்பூரும், மலாயாவும் மாலத்திவுகளும், இலக்கத்தீவுகளும் அந்தமானும் நிக்கோபாரும் அதனுடன் இணைந்த பகுதிகளாகவே இருந்தன. பிரிட்டிஷார் வென்று கைக்கொண்ட பகுதிகள் என்ற முறையில் தென்னகத்துடன் இந்திய, பாகிஸ்தான் பரப்புக்களும் ஒன்றாகக் கட்டிப்போடப்பட்டது போலவே, ஏடன், இலங்கை, மலாயா, சிங்கப்பூர், பர்மா ஆகியவையும் இந்திய ஏகாதிபத்தியத்துடன் சேர்த்து இணைக்கப்பட்டிருந்தன. அத்துடன் இவற்றைப் போலவே, வடமேற்கில் ஆப்கானிஸ்தானத்தையும் பலூக்கிஸ்தானத்தையும், வடக்கே நேபாள, பூட்டாணப் பகுதிகளையும், வட கிழக்கில் இந்துசீனம், சீனம், திபெத் ஆகியவற்றையும்கூடப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வென்று இந்திய ஏகாதிபத்திய ஆட்சியுடன் சேர்க்கவே விரும்பிற்று. ஆனால் இப்போது மேற்குப் பாகிஸ்தானின் பகுதியாக விளங்கும் பட்டாணிஸ்தான் என்னும் பழய ஆப்கானிஸ்தானப் பகுதியும்,பலூச்சிஸ்தானமும் மட்டுமே அவர்கள் கைவசப்பட்டு அன்றைய ஏகாதிபத்தியப் பகுதியுடன் சேர்ந்தன. இச்செய்திகளை மனத்துட் கொண்டே பாரத பக்தர்கள் 1947-ல் பிரிந்துவிட்ட பாகிஸ்தானிலிருந்து பட்டாணிஸ்தானைப் பின்னும் பிரித்துத் தம் பக்கம் சேர்க்க அரும்பாடு பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதே அடிப்படையில்தான் பாகிஸ்தானில் சேராத காஷ்மீரும் ஏகாதிபத்தியத்தின் நேர் வாரிசான தம்முடைய ஆட்சிக்கே உரிமையாக வேண்டுமென்று வாதாடி அதற்காக நம் பணத்தையும் இறைத்து, நம் மக்களுயிரையும் பெரிதும் பலி கொடுத்துள்ளனர். உண்மையில், பிரிட்டிஷார் நேபாளத்தையும் பூட்டாணத்தையும், திபெத்தையும் இந்துசீனாவையும், சீனத்தையும் வென்றிருந்தால்,அவையும் இந்திய ஏகாதிபத்தியத்தின் கூறுகளாகவே ஆகியிருக்கக்கூடும்- திராவிடத்தையும் காசுமீரத்தையும் அசாமையும் தம் கைக்குள் வைத்துக் கசக்க எண்ணும் தில்லி ஏகாதிபத்திய வாதிகள் அவற்றையும் விடாப் பிடியாகத் தம் தேசப் பகுதிகள் என்று இன்று கூறி வந்திருப்பர், வருவர் என்பதில் ஐயமில்லை. இன்றைய இந்திய ஏகாதிபத்தியத்தின் துரதிருஷ்டம், பிரிட்டிஷார் படைவலிமை சீனாவரை சென்று எட்டவில்லை. இல்லையென்றால் பிரிட்டிஷாரின் நேர் வாரிசான நேரு பண்டிதரின் ஏகாதிபத்தியக் கொடி திபெத்திலுள்ள கைலாசத்திலும் பறந்திருக்கும்! பாரத மக்கள் வணங்கும பரமேசுவரன் வாழும் மலையும், அவருக்குரிய தாழ்வடக்காய் தரும் மரம், விசிறியாம் வெண்சாமரம் தரும் கவரிமான் ஆகியவற்றைச் செல்வமாகக் கொண்ட நாடும் பாரத மக்களுக்கே உரியவை என்றுகூடப் பாரதம் பண்பாடியிருக்க வழியுண்டு! இதுமட்டுமோ? அக்கொடி காவிரிக் கரையில் மட்டுமல்ல, யாங்ட்ஸி ஆற்றுக் கரையிலும், மினாங், மீகாங் ஆற்றுக் கரைகளிலும்கூடப் பறந்திருக்கக் கூடும்.

நேபாளம், பூட்டாணம், ஆப்கானிஸ்தானம் ஆகியவற்றின் நல்ல காலம், அவை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் வெல்லப்படாததனால் அவ்வாறு வெல்லப்பட்ட இந்திய ஏகாதிபத்தியத்தின் பிடியுட்பட்டுத் தம் சுதந்தரத்தை இழந்துவிடவில்லை. அதுபோலவே, ஏடன், இலங்கை, பர்மா, மலாயா, சிங்கப்பூர் ஆகியவற்றின் நல்ல காலம், அவை பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே இந்திய ஏகாதிபத்தியத்திலிருந்து பிரிவுற்றுச் சுதந்தரம் பெற்றுவிட்டன. மூன்றாவதாக.பாகிஸ்தானின் நல்ல காலம் பிரிட்டன் இந்திய ஏகாதிபத்தியத்திலிருந்து பிரிந்து செல்லும்

— 10ம் பக்கம் —

என். எஸ். கே. நாடக மன்றம்

தொடர்ந்து பணியாற்றும்

“கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள், இதுகாறும் தமது நாடகங்களாலும், கலாநிகழ்ச்சிகளாலும், பொதுவாகத் தமிழ்க்கலைகளுக்கும், சிறப்பாகப் பொது நல நற்பணிகளுக்கும் பெரிதும் உதவி வந்ததை இந் நாடே அறியும்.

“கலைவாணர் அவர்களால் உருவாகி அவருடனேயே வளர்ந்து, வாழ்ந்து வந்த என். எஸ். கே. நாடக சபையினராகிய நாங்கள் இனிமேலும் பல நாடகங்களை நாடெங்கும் நடத்தி, அன்னாரின் தாராளமான பாதையிலே நடந்துவரத் தீர்மானித்திருக்கிறோம் என்ற நல்ல செய்தியைப் பொது நிறுவனங்களுக்கும், மக்களுக்கும் பெருமையுடன் இந்த அறிக்கையின்மூலம் தெரிவித்துக் கொண்டு நல் ஆதரவுகளைப் பெரிதும் தர வேண்டுகிறோம்”

என, என். எஸ். கே. நாடக சபையினர் சார்பில் அறிவிக்கப்படுகிறது.

அத்திப் பழம்

தாயின் ஆவல்

சிவகாமி அம்மாள் அன்று மாலை தெருவாசலுக்கும் வீட்டிற்கும் நடந்த நடைகளை இத்தனை என்று கணக்கெடுத்துச் சொல்லமுடியாது. 'இன்னும் வரவில்லையே' என்று ஒருகணம் எண்ணிப் பார்ப்பாள், உடனே 'ஒருவேளை இப்போது வரலாம்' என்று நினைந்து கைவேலைகளை எல்லாம் அப்படியே போட்டுவிட்டு வந்து வெளிவாயிலில் நின்று கண்பார்வையைக் கூர்மையாக்கிக் கொண்டு தெருக்கோடிவரை உற்றுப்பார்ப்பாள். யார் யாரோ வருவார்கள் போவார்கள். என்னென்னமோ பேசியபடி போவார்கள். சிலபேர் மெல்ல ஒரு சினிமா பாட்டை இசை கூட்டி மென்றுகொண்டே போவார்கள். பாட்டுக்கு ஏற்றவாறு கைவிரல்களால் 'சிட்டிக்கை'யைத் தாளமாகப் போட்டுக் கொண்டு போகின்றவர்கள் உண்டு. இந்தக் காட்சி சிவகாமி அம்மாளுக்கு ஒன்றும் புதியது இல்லை. அந்த மாத்தூருக்கு வந்து முதல் இருபது ஆண்டுகளாக நாள்தோறும் காணுகின்ற காட்சிதான் அது. என்றைக்கும் அப்படிப் போகின்றவர்களையும் கண்டு அந்த அம்மாள் விருப்போ வெறுப்போ கொண்டதில்லை. 'என்னமோ' என்று இருந்தவள்தான். ஆனால் திடீரென்று இன்றைக்கு அவர்கள்மீது காரணம் சொல்லமுடியாத ஒரு வெறுப்பு தோன்றியது. "வேலையற்றவர்கள்?" என்ற எண்ணம் தோன்றியது. 'தெருவிலே போகின்றபோது என்ன பாட்டு வேண்டியிருக்கிறது' என்று மனதிற்குள்ளாகவே முணு முணுத்துக்கொண்டாள் அந்த அம்மா.

உள்ளே போய்விட்டு மறுபடியும் ஒருமுறை சேலைத்தலைப்பை இழுத்துப் போர்த்திகொண்டு வெளியில் எட்டிப்பார்த்தாள். முகத்தில் மலர்ச்சி வரவில்லை. தெருவோடு யாரோ போனார்கள், அவர்களைப் பார்த்து "பட்டணத்துப் பஸ் வந்துவிட்டதா?" என்று கேட்டாள். "எந்த பஸ்சைக் கேட்கிறீர்கள்? 3 மணிக்கு போகும் பஸ் போய் விட்டது. இன்னும் ஒன்று வரவேண்டும்; அது 7½ மணிக்குத்தானே வரும்" என்று சொன்ன வண்ணம் அவர்கள் நகர்ந்தனர்.

"அதில்தான் வருகின்றாரோ என்னமோ?" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு உள்ளே போனாள். சற்றைக்கெல்லாம் மறுபடியும் வந்து எட்டிப்பார்த்தாள். சுவற்றில் இருந்த கடிகாரம் 7-30 என்று மணியைக் காட்டியது. இன்னும் சற்றுநேரத்தில் இதோ வருவார் என்று ஆவலாக அங்கு நின்று தெருக்கோடியையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

தெருவாயிற்படியில் தலையைச் சாய்த்தவாறு ஏக்கத்தோடு 'ஏன் இன்னும் வரவில்லை?' என்று குழம்பிக் கொண்டிருந்தபோது அந்த அம்மாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. இருபது ஆண்டுகளுக்கு முன்னே தன்னுடைய வாழ்க்கை இருந்த நிலையை எண்ணிப்பார்த்தாள்.

இப்போதுபோல் அப்போது தலையில் நரையும் இல்லை உடலில் திரையும் தோன்றவில்லை. இளவயதுத் தோற்றம்; திருமணம் ஆன புதிது.

இன்றும் அவள் தன்னுடைய கணவன் பெரியசாமியின் வருகைக்காகக் காத்து ஆவலோடு உருவமாக நின்று அங்கே நின்று அல்லாடிக் கொண்டிருந்தாள்.

அன்றைய தினமும் அப்படித்தான் அந்தப் பெரியசாமியின் வருகையை நோக்கித் 'தவம்' இருந்தாள். அன்று காதல் பொங்கிய உள்ளத்தோடு, ஆசையும் ஆர்வமும் ஒன்றாகக் கொன்று போட்டியிட்டுக் கொண்டு முன்னே தன் மாமிக்கு அஞ்சி மாமனுக்கு நாணி தெருவாயிற்படிக்கு வந்து நிற்கின்ற நிலை இருந்தது. இன்று அந்த மாமனும் இல்லை: மாமியும் இல்லை. ஆனால் இருபது ஆண்டுகளுக்குப்பின் சிவகாமி அம்மாள் என்ற அடைமொழியைப் பெற்றுவிட்ட நிலையில் அங்கே வந்து நின்றபோது கண்களில் காதல் ஒளி இல்லை; கவலையின் சாயல் இருந்தது. ஆசையும் இல்லை ஆனால் ஆர்வமும் துடிப்பும் இருந்தது.

அன்றைக்குப் புன்முறுவல் பூரிப்புடன் விளங்கிய சிவகாமி தெருவில் நின்று கணவனின் வருகையை எதிர்பார்த்தாள், இன்று அதே 'சிவகாமி அம்மாள்' தன் அருமை மகனைக் கல்லூரியில் விட்டுவரச் சென்ற தந்தையாகிவிட்ட தன் கணவன் பெரியசாமியின் வருகையை எதிர்பார்த்தாள். இரண்டுக்கும் இடையே எத்துணை வேறுபாடு!

இதை எண்ணிப் பார்த்த போது அவளுக்குக் 'களுக்' என்று சிரிப்புகூட வந்தது! எல்லாம் காலம் விளைத்த மாறுதல்.

ஆம். சின்னஞ் சிறு சிட்டு போல் ஆடித்திரியும் பருவத்தில் வாழ்க்கை இதுதான் என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளாத இளமையில்கணவனின் இன்ப அணைப்பின் இனிமையை மட்டுமே நம்பி எதிர்பார்த்து அந்த வீட்டிற்குள் 'வலது' காலை எடுத்துவைத்த சிவகாமியின் வயிற்றில் தோன்றி வளர்ந்து உள்ளூர் உயர்நிலைப்பள்ளியில் பத்தாவதுவரை படித்து முடித்த ஞானசம்பந்தன் அன்றைய தினம் கல்லூரியில் சேர்ந்துவிட்டான். அவனைக் கல்லூரியில் விட்டுவரச் சென்ற அவன் தந்தையை, தன் அருமைக் கணவனை, எதிர்பார்த்து அவள் அங்கே நின்றிருந்தாள்.

காத்துக் காத்துக் கண்கள் 'பூத்து'ப் போகின்ற வேளையில் பெரிய தெருவும் அவர்கள் வீடு இருந்த சின்னத்தெருவும் சந்திக்கின்ற முனையில் மினுக் மினுக் கென்று ஒளிகாலும் ஊராட்சி மன்றவிளக்குகம்பத்தின் பக்கத்தில் இருபது ஆண்டுகளாகப் பழகிய அந்த நடையைக் கண்டவுடன்தான் சிவகாமி அம்மாளுக்கு வாய்மூச்சு வந்தது.

அந்த நடை என்ன இன்று நேற்று பழகிய நடையா? இருபது ஆண்டுகளாகப் பார்த்துப் பார்த்து தெரிந்திருக்கின்ற நடை அல்லவோ அது? ஆயிரம்பேர் கூடி இருக்கின்ற இடத்திலும் இடது பக்கமாகத் தலையைச் சாய்த்து வலதுகாலை ஊன்றி நொண்டினாற் போல் நடக்கின்ற நடை ஒன்றைக் கொண்டே வெகு தொலைவில் இருந்தாலும் தன் கணவனை அடையாளம் சொல்லமுடியுமே. பெரியசாமிதான் என்று நிச்சயமானபின் அங்கே மேலும் ஒரு கணம்கூட நிற்க அந்த அம்மாவின் பழக்கம் இடம்தரவில்லை. "ஏன் தெருவில் நான்குபேருக்கு எதிரில் வந்து நின்றாய்?" என்று பெரியசாமி சீறுவார். அவர் சீறிக்கொள்ளுவார் என்ற அச்சம் அல்ல காரணம். அப்படி அவர் இது வரையில் என்றும் சொன்னது இல்லை. ஆனால் அவர் வரவு நோக்கித் தெருவில் நிற்பதைத் தொலைவிலே பார்த்தாலே போதும் வீட்டிற்கு வந்தும் சிவகாமி பாடு அன்றைக்கெல்லாம் திண்டாட்டம்தான்.

'சிவகாமி'

"........."

"சிவ...காமி"

"ஏனும்"

"எங்கே இருக்கிறாய்?"

"எல்லாம் இங்கேதான்"

"நான் சொல்லட்டுமா"

"என்னத்தை நீங்கள் சொல்வது?"

"நீ ஏன் தெருவில் நின்றாய்..."

"இந்தக் குறும்புதானே..."

"குறும்பு என்ன இருக்கிறது?"

"பின்னே..."

"வருகின்ற வழியில் நம்முடைய வீடு தெரியாமல் வேறு வீட்டில் நுழைந்துவிடுவேன் என்று நினைத்து..."

"நினைத்து...?"

"இதோ இதுதான் அத்தான் உங்கள் வீடு என்று அடையாளம் சொல்லத்தானே நீ தெருவில்..."

"ஆமாம்-உங்களுக்குத் தெரியும் எல்லாம்...இப்படி கடந்த காலத்தில் எத்தனையோ முறை அவர்களுக்குள்ளே உரையாடல் நடந்திருக்கின்றது. என்றும் நாள் தவறாமல் சிவகாமி தெருவாயிற்படியில் நின்று தன் நாயகனின் வரவு காணத்தவறியது இல்லை.

இன்றும் அப்படித்தான் பெரியசாமி வந்தவுடன் கேட்பார் என்று எண்ணித்தான் அவள் திடும் என உள்ளே போனாள். ஆனால் அவள் உள்ளே போவதற்குள் தன் வீட்டு முகப்பை வழக்கம் ஒரு நோட்டம் விட்டு அங்கே வழக்கம்போல் தன் மனைவி நின்றிருந்ததைக் கண்டு இதழ்க்கோடியில் இள நகை ஒன்றை வழியவிட்டார். பெரியசாமி.

நடையில் இன்னும் வேகம் கூட்டி விரைந்து வீட்டிற்குள் சேர்ந்தும் சேராததுமாக 'சிவகாமி' என்று கொல்லைக் கிணற்றடிக்கும் கேட்கும் வண்ணம் அழைத்தார்.

"ஏன் இங்கேதான் இருக்கின்றேன்" என்றாள் அந்த அம்மா.

"சிவகாமி நீ வந்து தெ..."

"தெருவில் நின்று ராஜா வரவில்லையே ரோஜாப்பூ வாடிப் போகின்றதே என்று பாட்டுப் பாடவில்லை. வழக்கமான குறும்பு இருக்கட்டும் சம்பந்தன் எங்கே?" என்றாள்.

"என்னது?"

"சம்பந்தன் எங்கே என்கிறேன்."

"அவனைத்தான் கல்லூரியில் சேர்த்துவிட்டு வந்தேனே?"

"அதைத்தான் கேட்கிறேன். எந்தக் கல்லூரியில் — சாப்பாட்டிற்கு என்ன செய்தீர்கள்? சனிக்கிழமை தவறாமல் எண்ணெய் தேய்த்துக்கொள்ளச் சொன்னீர்களா? அவனுக்குக் கத்தரிக்காய் என்றால் பிடிக்காதே அதே அதையே தினம் செய்துவிட்டால்..."

"அப்பப்ப ஒரு மனிதனை நீ என்ன இப்படி வாட்டி எடுக்கின்றாய்?"

"நான் என்ன வாட்டி எடுக்கின்றேன்? பையனைப் பற்றிக் கேட்டேன். உங்களுக்கு எப்

மாகி.கணேசன் எம்.ஏ.

போதுமே இப்படித்தான். நான்தான் பார்க்கின்றேனே இந்த இருபது ஆண்டுகளாக...''

''அம்மா தாயே உன் மகன் நலமாக பத்திரமாக இருக்கின்றான். எனக்கு இன்னும் பயணக்களைப்பு தீரவில்லை. வெந்நீர் இருந்தால் விளாவி வை குளித்துவிடுகின்றேன். பிறகு உன் கதையைச் சொல்லுகின்றேன்...'' என்று அவளை பின்கட்டுக்கு அனுப்பிவைக்கப் பட்டபாடு பெரும்பாடாக இருந்தது.

பெரியசாமி குளித்துவிட்டு வருவதற்குள் சிவகாமி அம்மாள் மணையை எடுத்துப் போட்டு இலையை விரித்துச் தண்ணீர்க் குவளையையும் பக்கத்தில் வைத்துத் தயாராகக் காத்திருந்தாள். சாப்பிட்டவாறே பெரியசாமி தன் மனைவியிடம் மகன ஞானசம்பந்தனைக் கல்லூரியில் சேர்த்த கதையைச் சொல்லி முடித்தார்.

''என்ன ஒரு வாரமா ஆயிற்று கல்லூரியில் சேர்க்க?''

''ஆமாம்.''

''ஏன் அப்படி?''

''ஏன் என்ருல்?''

''நம் ஊர்ப் பள்ளிக்கூடத்தில் பையனை அழைத்துக்கொண்டு போனால் உடனே சேர்த்துக் கொள்ளுகின்ருர்களே. அதைப் போலத்தானே அங்கேயும் இருக்கும்?''

''சரிதான் உன்னிடத்தில் எதைச் சொல்வது? நம் ஊர்ப் பள்ளிக்கூடம்தானு அது? யார் யாரைப் பார்க்கவேண்டும் என்னென்ன செய்யவேண்டும் அதெல்லாம் உனக்கு எங்கே தெரியப்போகின்றது?'' என்று பெரியசாமி அலுத்துக்கொண்டார்.

''தெரியாமல்தான் உங்களோடு இந்த இருபது ஆண்டுகளாகக் குடித்தனம் நடத்தினேனு?'' என்று சிவகாமி அம்மாள் சினந்து கொள்வதுபோல் பாவனை செய்தாள்.

ஒருகணம் அமைதி நிலவியது உணவு உண்டுமுடிந்த பின்னர் அவசர அவசரமாக சிவகாமி அம்மாளும் இரண்டு கவளம் அள்ளிப்போட்டுக் கொண்டு வெற்றிலைத் தட்டுடன் தெருத் தாழ்வாரத்தை நோக்கிவந்தாள். கணவன் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு காலை நீட்டி கையைச் சொடுக்கு ஒடித்து அலுப்பு தீர நீட்டி உட்கார்ந்திருக்க இந்த அம்மாள் ஒவ்வொரு வெற்றிலையாகச் சுண்ணும்பு தடவி மடித்துக் கொடுத்துக்கொண்டே ஞானசம்பந்தன் கதையைக் கேட்டுக்கொண்டாள்.

''அதெல்லாம் சரிதான் எப்பாடு பட்டோ சேர்த்துவிட்டீர்கள் கல்லூரி எங்கே இருக்கிறது?'' என்று கேட்டாள்.

''சென்னையில்தான் ஆனுல் நடுப்பட்டணம் இல்லை. ஒரு ஓரமாக...''

''சாப்பாடு எங்கே ஏற்பாடு, செய்தீர்கள்?'' என்று அந்தத் தாய் உடனே கேட்டாள்.

உலகத்தில் எந்த உயிருக்கும் தாய்மை வந்துவிட்டால் வயிற்றிலே முகிழ்த்து வளர்ந்த அந்தக் கரு என்ன ஆயிற்று என்றுதான் முதல் கவலையாக இருக்கின்றது. தாக்க வரும் வெம்புலி தன் குட்டிகளைக் கண்டதும் தண்மை பெறுகின்றது. வான முகட்டில் சிறகடித்துப் பறந்து திரியும் பறவைகள் தங்கள் கூரிய அலகில் இரை ஒன்றைக் கொத்திக் கொண்டுவந்து கூட்டில் இருக்கும் சின்ன வாய்களில் ஊட்டி ஊட்டி மகிழ்கின்றது ஏழை ஆனுலும் ஏற்றம்பெற்ற பணக்காரர்கள் ஆனுலும் தாய் மனதில் தன் சேயினுடைய வயிறும் - வயிற்றுக் கவலையும் தெரிகின்றதே தவிர மூளை தெரிவதில்லை. எந்தத் தாயும் தன் மகன் சான்றோன் ஆவதில் கொள்ளும் கவலையைவிட அவன் சாப்பிட்டானு என்பதிலேயே கவலையும் ஈடுபாடும் கொள்கின்ருள்.

சிவகாமி அம்மாள் சற்றைக்கு முன் கத்தரிக்காய் எண்ணெயக் குழம்பு விட்டுச் சோற்றைக் குழைத்துக்கொண்டே எங்கோ பட்டணத்து மூலையில் இருந்த தன் மகனின் வாயையும் வயிற்றையும் நினைந்துகொண்டாள். அந்த மகன் எங்காவது 'குளிர்ந்த நீர்' 'பழக்கலவை' ஏதேனும் சுவைத்து அருந்திக்கொண்டிருக்கக்கூடும். ஆனுல் இந்தத் தாயின் உள்ளம் அந்தச் சுவையில் இருப்பதைவிட தன் கையால் சமைத்த பொருளிலேயே சத்தும் உயிரும் கலந்திருக்கின்றது. என்று எண்ணுகின்றது.

''எங்கே சாப்பாடு?'' என்று சிவகாமி கேட்டது வெறும் சடங்குக்கன்று. உள்ளத்தே உணர்ந்து கவலையோடு கேட்டாள். அந்தக் கவலை அவள் குரலில் ஒலித்ததைப் பழக்கத்தால் உணர்ந்துகொண்ட பெரியசாமி, ''ஒன்றும் கவலைப்பட வேண்டாம் மாணவர் விடுதியில்தான் விட்டிருக்கின்றேன். இவனைப்போல் அங்கே அறுநூறு மாணவர்கள் இருக்கின்றனர். இவனும் நலமாக இருப்பான்'' என்ருர்.

அப்போதும் அந்தத் தாயின் உள்ளம் அமைதியுற முடியவில்லை. ''என்னமோ நீங்கள் சொல்லுகின்றீர்கள். நீங்கள் எப்போதும் இப்படித்தான். எதிலும் கவலை கொள்ளாமல்'' என்று சலித்துக்கொண்டாள்.

ஒரு கவலை தீர்ந்ததும் அந்தத் தாயின் மனதில் வேறு ஒரு கவலை வந்து புகுந்துகொண்டது.

சின்னக் குழந்தையாக ஞானசம்பந்தன் தொட்டிலில் கைகால்களை உதைத்து உதைத்து ''ஊ ஊ'' என்று அழுத காலம் தொட்டே அந்தத் தாயின் மனதில் தன் மகனின் மணக்கோலத்தைக் காணவேண்டும் என்று ஏக்கத்தோடு எண்ணிக்கொண்டே இருந்தாள். அவள் எண்ணத்தை வெளியிட்டபோதெல்லாம் பெரியசாமி அவளை எள்ளி நகையாடிக் கொண்டே இருந்தார். ''இப்போதே என்ன அவசரம்; பத்தாவது முடிக்கட்டும் செய்துவிடுவோம் நல்ல பெண்ணுகப் பார். என் அம்மாவைப்போல் ஆய்ந்து பார்க்காமல் ஏமாந்துவிடாதே'' என்று பெரியசாமி சிவகாமியை வம்புக்கு இழுத்து வேடிக்கைப் பார்ப்பார்.

''உங்கம்மா என்ன ஏமாந்தார்கள். நாங்கள்தான் ஏமாந்தோம். பிள்ளை நல்லவர், குணம் தங்கம், என்று என்னென்னவோ சொன்னுர்கள். ஆனுல் உங்கள் குணம், எனக்கல்லவா தெரிகின்றது இப்போது என்று சிவகாமியின் சிந்தை வேறு பக்கத்தில் பாய்ந்துவிடும்.

ஆனுல் அன்று பெரியசாமி அப்படித் தப்பித்துக்கொள்ள முடியவில்லை. ''பத்தாவது முடியட்டும்'' என்று இதுவரை சொன்ன 'சாக்கு' இனி பயன்படாது என்பதைத் தெரிந்து கொண்டு வானத்தை அண்ணுந்து பார்த்துக்கொண்டே இருந்தார். சிவகாமியோ ''நான் சொல்வதைக் கேட்டால்தானே? நீங்கள், என்று நான் சொன்னதைக் கேட்டீர்கள், இன்று கேட்பதற்கு?'' என்று குறைபட்டுக்கொண்டான்.

மகனுடைய திருமணத்தைப் பற்றி எண்ணுவதைவிட்டுப் பெண்களின் மனநிலையைத் தான் பெரியசாமி அப்போது நினைந்து வியந்துகொண்டிருந்தார்.

பெண்களுடைய மனம் எப்போதும் இரண்டுவகை எண்ணங்களைக் கொண்டதாகவே இருக்கிறது. அதிலும் தங்கள் வயிறறில் இரத்தத்தில் ஊறி உலகில் உலவிடும் மக்கள் செல்வத்தினிடம் அவர்கள் கொண்டுள்ள நிலையை என்னென்பது தன் மகனுக்கு இருபது முப்பது வயது ஆனபின்னரும்கூட 'குழந்தை இங்கே வா' என்றுதான் அவள் தன் மகனை அழைக்கின்ருள். ஆனுல் அவனுக்குத் திருமணம் முடித்துவிட வேண்டும் என்று அவள் மிகச் சின்ன வயதாக அந்தப் பையன் இருக்கும்போதே தன் மனத்திலாவது தீர்மானித்துவிடுகின்ருள். ஏன் இந்த நிலை? ஆண்களைவிடப் பெண்களுக்குத் தற்காப்பு எண்ணங்களும், பாதுகாப்பு உணர்ச்சியும் மேலோங்கி நிற்கின்றது. அதனுல் கூடுமான வரை தன் குடும்பத்தை வாழ்க்கையை, தன்னேடு தொடர்பு கொண்டவர்களின இயக்கத்தை சீர்படுத்திச் செம்மைப்படுத்திவிட வேண்டும் என்று கருதும் எண்ணமே அதற்குக் காரணம்.

இவ்வாறு பெரியசாமி ஏதேதோ எண்ணிக் கொண்டே தன்னை மறந்திருந்த நிலையை சிவகாமியின் குரல் கலைத்து அவரை நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தியது.

நான் கேட்டுக்கொண்டே இருக்கின்றேன். நீங்கள் என்னமோ மேலே பார்த்துக் கொண்டே இருக்கிறீர்களே. ''பைத்தியக்காரி உளறட்டும் நமக்கென்ன என்பதுதானே உங்கள் எண்ணம்'' என்று கேட்டுவிட்டுத் தன்னுடைய கோபத்தை வெளிப்படுத்தினுள்.

சற்றுநேரம் அங்கே ஆழ்ந்த அமைதி நிலவியது. அந்த அமைதி அவர்களுக்குள்ளே சாதாரணமானது. அடிக்கடி அவர்களுக்குள் சிறுசிறு தாங்கல்கள் வந்துவிட்டால் சிலசில குடும்பங்களில் இருப்பதைப்போல் உன்னுடைய வாய் எவ்வளவு என்னுடைய கை எவ்வளவு என்று அளந்து பார்த்துக்கொள்வதில்லை. வாய்மூடி மௌனிகளாய்ச் சற்றுநேரம் இருந்ததும் வந்த வம்பு தொலைந்து அவர்கள் முன்னே இருந்ததுபோல், இடையிலே ஏதும் நிகழாதது போல், இருந்துவிடுவார்கள். அதனுல்தான் அந்தக் குடும்பத்தில் அன்பு நிலவுகின்றது. 'என்னை அவர் மதிக்கவில்லை' 'எனக்கு அவள் மரியாதை தருவதில்லை' என்று ஆணும் பெண்ணும் எதை எதையோ எண்ணிக்கொண்டு ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டுக் குழம்பித் தவிப்பது உண்டு. குடும்பத்தில் மதிப்பு மரியாதை எல்லாம் மனத்தில் இருக்கவேண்டியதுதான். என்ருே எங்கோ ஒரு நாள் ஒருபொழுது கண்டு பழகுகின்றபோது மரியாதையையும் மதிப்பையும் கட்டுமீறிக் காட்டிக் கொண்டிருக்கலாம். ஆனுல் நாள்தோறும் வாழ்நாள் எல்லாம் கலந்துஉறவாடுகின்றவர்களிடம் மனம் மனத்துடன் பழகட்டும் என்றுதான் விடடுவிட வேண்டும். இந்த உண்மையைப் பெரியசாமிக்கு எந்தப் புத்தகமும் உணர்த்தவில்லை. இந்த இருபதாண்டு வாழ்க்கை உணர்த்தி இருக்கிறது. இதனுல் இப்போது 'சும்மா இருத்தலே சுகம்' என்று எண்ணி 'ஊம்' என்று மட்டும் நீட்டி முழக்கிவிட்டு முழங்கால்களைத் தடவிவிட்டுக்கொண்டார்.

''என்ன பெரியசாமி, இடம் கிடைத்ததா? எங்கே சேர்த்தாய்?'' என்று கேட்டுக் கொண்டே மணிவண்ணன் வாசல்கதவைத்திறந்துகொண்டு உள்ளே வந்தார்.

சிவகாமி அம்மாள் ஒரு பக்கமாக நகர்ந்து உட்காாந்து கொண்டு! நீங்களே கேளுங்கள் ஐயா, நான் கேட்டால் அவருக்கு மூக்குக்கு மேலே வருகிறது கோபம்'' என்று குறைபட்டுக்கொண்டாள்.

மணிவண்ணனே அதைக் காதிலே ஏற்றுக்கொள்ளாமலே 'எனக்கென்ன'மா தெரியும்? உங்களுக்குள்ளே நூறு இருக்கும் ஆயிரம் இருக்கும். எதுவோ இருக்கும், நான் கேட்கலாமா? என்று சிரித்து மழுப்பினுர்.

தொடரும்

கேள்விப்பெட்டி

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

மா. சுப்பையா,
நாரைக்கிணறு.

கி. பி. 2-ம் நூற்றுண்டிலேயே இளங்கோ, தன் சிலம்பில்,

**"தாதை ஏவலின் மாதுடன்
போகி, காதலி நீங்கக்
கடுந்துய ருழந்தோன்,
வேதமுதல்வற் பயந்தோன்"**
—ஊர்காண் காதை

எனவும்,

**"மூவுலகும் ஈரடியான்
முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத்
தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத்
தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத
செவியென்ன செவியே!
திருமால்சீர் கேளாத
செவியென்ன செவியே!"**
—ஆய்ச்சியர் குரவை

எனவும்,

இராமனைக் கடவுளாக்கியிருக்க, திராவிட முன்னேற்றக் கழகம், கி. பி. 12-ம் நூற்றுண்டில் வாழ்ந்து இராமாயணம் எழுதிய கம்பன்மீது அந்தப் பழியைப் போடுவானேன்? விளக்கம் வேண்டும்!

சிலப்பதிகாரத்தில் மட்டுமன்றிச் சங்க இலக்கியத்திலும் இராமாயண பாரதக் கதைக் குறிப்புக்கள் உண்டு. இது மட்டுமன்று. இராமாயண பாரதக் கதையுறுப்பினர்களையே சமகாலத்தவர்களாகக் குறிக்கும் பாடல்கள்கூட உண்டு. இவை ஆராய்ச்சியாளர்களின் மூளையை இன்னும் குழப்பியே வருகின்றன. தமிழ்ப் பற்றுளரை மட்டுமன்றி சமஸ்கிருதப் பற்றுளர்களையும் இவை குழப்பாமலில்லை. ஏனென்றால் பிந்தியவர் கொள்ள விரும்புகிறபடி இராமாயண பாரதங்களை உண்மை என்று கொண்டால், இப்பாடல்கள் அக்காலத்தவை என்றும், பாண்டவரில் மூத்தோனான தருமனும் இராமனும் அவர்களுடன் பழகிய முனிவர்களும் தமிழ் கற்ற தமிழ்ப்புலவர்கள் என்றும் ஒப்புக்கொள்ள நேரிடும்.

இச்சான்றுகள் பற்றிய முடிவுகளை இன்னும் வாசகர்கள் மனப்போக்கிற்கே விடவேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆனால் திராவிட நாகரிகம் பற்றிய பேரறிஞர்கள் கூற்றுப் பொதுவாகவும் திருத்தந்தை ஹிராஸ் கருத்துச் சிறப்பாகவும் இங்கே குறிப்பிடத்தக்கது.

சமஸ்கிருதத்திலிருக்கும் பாரத இராமாயணங்கள் (வால்மீகி, வியாசர் பெயரால் இயங்குபவை) முதல் நூல்கள் அல்ல. வழிநூல்கள் கூட அல்ல. மொழிபெயர்ப்புக்கள் கூட அல்ல. தழுவல் மொழிபெயர்ப்புகளே. சமஸ்கிருதமே பழமையான மொழி என்றும், சமஸ்கிருத இதிகாசங்களே மூல ஏடுகள் என்றும் சமஸ்கிருதப் பற்றுளர்கள் நெடுங்காலம் பிரசாரம் செய்து மக்களை நம்ப வைத்ததுடன் அறிஞருலகையும் மயங்கவைத்துள்ளனர். பெரும்பாலான அறிஞர்கள் ஆரியச் சார்பாளராயிருந்து வந்திருப்பதனால் ஆராய்ச்சிப் பேரறிஞர்கள் முடிவு, மக்களை — திராவிட இயக்க முன்னணி இளைஞர்களைக்கூட — வந்தெட்டாமல் பொதிந்து மூடப்பட்டுள்ளது.

புத்த சமய சாதகக் கதைகளில் இராமாயண பாரதக் கதைகளின் பழய வடிவங்கள் இயல்கின்றன. இவை சமஸ்கிருத பாரத இராமாயணங்களைவிடப் பழமையானவை என்று பண்டித ஜவஹர்லால் முதல் வடதிசை அறிஞர் பலரும் இன்று ஏற்றுப் பாராட்டுகின்றனர். புத்த சமணக் கதைகளும் முற்ற முழுக்க முதல் வடிவங்களல்ல என்பதைக் காண்டல் அரிதன்று. பாரத இராமாயணங்களை உள்ளடக்கிய இந்தியாவின் மிகப் பழமையான மாபெரும் காப்பியம் பெருங்கதை (சமஸ்கிருதம்: பிருகத்கதா): இது ஆதி கவியென்றும் சுக்கிராச்சாரி என்றும் உசனு என்றும் பல புகழ்ப் பெயர்கள் பெற்றிருந்த குணாட்டியன் என்ற புலவரால் பைசாச மொழியில் இயற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. சமஸ்கிருதத்தில் இன்று கிடைக்கும் அக்காவியத்தின்மொழிபெயர்ப்புத் தழுவல்களில் சில தற்கால ஆரிய சமயச் சார்பானவை. ஆனால் மிக முற்பட்டது புத்தசமயச் சார்பானது. இவற்றின் ஒப்புமையால் மேலையறிஞர் மூலநூல் சைவ சமயச் சார்புடையதே என்று நிலை நாட்டியுள்ளனர்.

இப்பெருங் கதை பாரத இராமாயணங்களுக்குமட்டுமன்றி உலகெங்குமுள்ள காவிய, கதை இலக்கிய முழுமைக்குமே மூலாதாரமானது என்று உலகப் பேரறிஞர்கள் ஆய்ந்து முடிவு செய்துள்ளனர்.

பாரத இராமாயணக்கதைகளின் மூல வடிவங்கள், ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே திராவிடரிடையே நிலவி வந்திருக்க வேண்டும் என்கிறார் திருத்தந்தை ஹீராஸ்.

இன்றிருக்கும் இராமாயணங்களிலே இராமனைக் கடவுளாக்கிய முதல் இராமாயணக் கவிஞன் கம்பனே. இராமனைக் கடவுளாக்கிய சமஸ்கிருத அத்யாத்ம ராமாயணம் வால்மீகியால் இயற்றப்பட்டதாகக் கூறப்பட்டாலும், கம்ப ராமாயணத்துக்குப் பிற்பட்டது. கம்ப ராமாயணத்தின் மொழிபெயர்ப்புத் தழுவல் என்றுகூடக் கூறத்தக்கது. மற்ற இந்தியத் தாய் மொழிகள் அனைத்திலும் உள்ள இராமாயணங்களோ, அனைத்தும் கம்ப ராமாயணத்துக்குப் பிற்பட்டவை. கம்ப ராமாயணத்தைப் பெயர் கூறுமல் பின்பற்றியே இயற்றப்பட்டவை.

ஆரிய இராமாயணத்தில் இராமனைக் கடவுளாக்கிய முதற் கவிஞர் கம்பராயினும், அக்கருத்தைத் தோற்றுவித்தவர் அவரல்லர்.

மாயோன் அல்லது திருமால் தமிழினத்தவர் ஐந்திணைத் தெய்வங்களுள் ஒருவர். முல்லை நிலத் தெய்வம். ஆயர் குடி முதல்வன், புகழ்பட வாழ்ந்த ஆயர் குடி வீரனின் வீர வணக்கமாக அது தொடங்கியிருத்தல் வேண்டும். அவன் வழி பிறந்த கண்ணனும், இராமனும் அம்மரபின் புகழ் புதுக்கியதனால் அவன் புதுப் பிறப்பினராகக் கொள்ளப்பட்டிருத்தல் இயல்பு. இராமன் சிசு நாககுடியின் முதல்வன். புத்தரும் நாககுடியில் பிறந்தவரே. புத்தர் திருப் பிறவிக் கோட்பாட்டுடன் இணைந்தே திருமால் பத்துத் திருப்பிறவிக் கோட்பாடு தோன்றியிருக்கலாம்.

ஆரியர் தொடக்கத்தில் சிவ நெறி, திருமால் நெறி, புத்த நெறி, சமண நெறி ஆகிய நான்கு நெறிகளையும் ஒருங்கே எதிர்த்தவர் ஆவர். நான்கு நெறிகளுக்கும் அடிப்படை ஒற்றுமையும் உண்டு. ஆனால் நான்கிலும் ஒன்றுடன் சேர்ந்து ஒன்றை, சிலவற்றுடன் சேர்ந்து சிலவற்றை எதிர்த்தே, அவர்கள் புத்த நெறியை இந்தியாவிலிருந்து ஓட்டி, சமண நெறியை ஒடுக்கி, சிவநெறி, திருமால் நெறிகளைத் தம் கால் பிடிக்கும் குற்றேவலராக்கியுள்ளனர். வடஇந்தியாவில் ஆரியர் திருமால் நெறியை, கி. பி. முதல் நூற்றுண்டிலிருந்து கி. பி. 18-ம் நூற்றுண்டு வரை எதிர்த்து, சிவாஜியின் காலத்தில்தான் அதனுடன் முழுதும் சமரசம் செய்து அதை அடிமைப்படுத்தினர்.

இராமன், கண்ணன் ஆகியோர் கறுப்பு நிறமாயிருப்பதும், இருவர் பிறந்த திதிகளான அட்டமி நவமி இன்னும் ஆரியரால் கெடு நாட்களாகக் கருதப்படுவதும் ஆறியும் தழும்பறுத இப்பழய காழ்ப்பின் புண்கள் ஆகும்.

இராமன், கிருஷ்ணனை இந்தியா முழுவதிலும் உள்ள பழங்குடி மக்களில் ஒரு பிரிவினர் தம் குல தெய்வமான மாயவன் பிறவிகள் என்று கருதினர். வடநாட்டில் ஆரியர் வைணவ சமயத்தை முழுதும் ஏற்கத் தொடங்கியது 12-ம் நூற்றுண்டுக்குப் பின்னரே. ஆகவேதான் ஆரிய இராமாயணங்களில் காணுத பல கருத்துக்கள், பண்புகள், கதைக் கூறுகள், மக்களிடையே எங்கும் நிலவி, தென்னக இலக்கியத்தில், தமிழிலக்கியத்தில் முதல முதலாகப் பதிவுற்றன. சங்க காலத்திலும் அதற்கு முன்னும் தமிழில் பாரத இராமாயண இலக்கியங்கள் இருந்தன என்பதற்குச் சான்றுகள் பல.

வட திசையில் கி. பி. 10-ம நூற்றுண்டுக்குப் பின்வரை நுழையாத பல புராணக் கருத்துக்கள், தமிழிலக்கியத்தில் முதல் நூற்றுண்டுக்கு முன்பே காணப்படுகின்றன. திராவிட இனத்தின் பழம் பெருங் கதைகளையே ஆரியர் திராவிட அறிஞருக்கு எதிராக மூட நம்பிக்கைப் பிரசாரம் செய்வதற்காகத் திறம்படத் திரித்துப் புராண இதிகாச சுமிருதிகளாக்கினர். மக்கட் செல்வாக்குப் பெற்ற திராவிட அறிஞர் எதிர்ப்புக்கஞ்சி ஒரு சில அறிவு நூல்களையும் கலை நூல்களையும் இதுபோலச் சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்துத் திரித்து வைத்துக்கொண்டு தேசியத் தாக்குதல்களையும் சமாளித்தனர். நாளடைவில் அயல் பண்புடைய ஆட்சியின் செல்வாக்குக் காரணமாக, தமிழ் முதல் நூல்கள் அழிந்தோ,மரபிழந்தோ, செல்வாக்கிழந்தோ போனபின், இந்தப் போலித் தழுவல்களெல்லாம் முதனூல்களாகி, அவற்றை அறிவுடன் ஆக்கித் தந்த மூதாதையரின் பிள்ளைகளை வழி வழி அழித்தடக்கும் கருவிகள் ஆயின.

கம்பன் வால்மீகிக்கு மாறுகக் கூறிய பகுதிகள் பல, கம்பன் புகுத்திய புதுச் சரக்குகள் என்று இன்று கருதப்படுகின்றன. ஆனால் அவற்றுள் சிலவற்றையேனும் சங்க இலக்கியத்தில், தேவார திருவாசகங்களில், திரு நாலாயிரங்களில் காணலாம்.

திராவிட முன்னேற்றக் கழகம் கம்பன்மீது பழியைச் சுமத்துவது அவன் ஆரியத்துக்கு, அதன் பண்பாட்டுக்கு அளித்த உயர்வு நோக்கியும்,தமிழுக்கும் அதன் பண்பாட்டுக்கும் அளித்த அவமதிப்பு நோக்கியுமேயாகும். இவற்றை அவன் வேண்டுமென்றே செய்யாதிருந்திருக்கலாம்,செய்திருக்கலாம். காலச் சூழலால் செய்திருக்கலாம், தன்னலத்தாலும் செய்திருக்கலாம். ஏனெனில் தமிழ்ப் பண்பை இழிவு செய்து புகழ் பெற்ற அதே கவிஞன் காலத்திலும், அதனையடுத்துமே தமிழ்ப் பண்பை உயர்த்தி இன்றுவரை இழிவு நீங்காத நிலை உடைய ஒட்டக்கூத்தரும் சயங்கொண்டாரும் வாழ்ந்திருந்தனர்.

காலத்தின் செல்வனைக் கம்பனைக் கொள்பவர்கூட இன்றுபோல் அன்றும் இருந்திருத்தல் இயல்பே. மாறுதல் காலத்தில் சுழல் எதிர் சுழல்களாக நாட்டுப் பண்பு பேணி நலிபவர்,நாட்டுத் தியாகிகள் ஒருபுறமும் அதுபேணுவதுபோலப் பொதுமக்களிடம் பசப்பி எதிர் பண்பு வளர்த்து அயற் பண்பாட்சியாளரிடம் பட்டம் பதவி பரிசுகள் பெற்றுப் புகழ் தமதாக்கிக்கொள்ளும் வீடண அறிஞர் ஒரு புறமும், இருப்பது இயல்பு என்பதையொப்புக்கொண்டே யாக வேண்டும். கம்பர் நல்ல கவிஞரே. ஒட்டக்கூத்தரும் நல்ல கவிஞரே. ஆனால் வீடணரான கம்பருக்கு அவர் தகுதிக்கு மேற்பட்ட புகழ் அன்று முதல் இன்றுவரை கிடைத்துள்ளது. தியாகியான ஒட்டக்கூத்தருக்கு, சயங்கொண்டாருக்கு அன்று முதல் இன்றுவரை அவர் தகுதிக்குரிய புகழ் கிட்டவில்லை. மூவருலாவும் கலிங்கத்துப் பரணியும் கம்ப ராமாயணக் காலத்துக்கு ஒரு சிறிதுதான் முந்தியவை. தமிழர் புகழ் பாடிய அவற்றுக்கு இன்று விழாக் கிடையாது. கம்ப ராமாயணத்துக்கு உண்டு. இந்நிலையை மறுமலர்ச்சித் தமிழகம் மாற்ற வேண்டும். ★

இராமனுதபுர மாவட்டம், திருப்புத்தூரைச் சேர்ந்த அ. குருசாமி அவர்கள் சுவைபடப் பேசும் இளம் பேச்சாளர். அவரைக் கழக நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் கழகத் தோழர்கள், கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம்.

அ. குருசாமி,
நகர தி. மு. க.,
திருப்புத்தூர்,
இராமனுதபுர மாவட்டம்.

'இந்திய ஏகாதிபத்தியம்' என்றால் என்ன?

— 6ம் பக்கத் தொடர்ச்சி —

போதே அதுவும் இந்திய ஏகாதிபத்தியத்தினிடமிருந்து **பிரிந்து சுதந்தரம் பெற்றுவிட்டது**, ஆனால் திராவிடம், அசாம் முதலிய பகுதிகளுக்குமட்டும்தான் ஏகாதிபத்தியத்தின் ஆட்சியாளர் பிரிந்து சென்ற பின்னும், அந்த ஏகாதிபத்தியத்திலிருந்து பிரியாத நிலையில் அவ் அடிமைப் பரப்பில் ஒட்டிய அடிமைப் பரப்பாய் இன்னும் சில காலம் இயங்கும் துரதிருஷ்டம் ஏற்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து முதல் முதல் பிரிவுற்ற நாடுகள் இந்திய ஏகாதிபத்தியத்துக்கு வெளியேயுள்ள கானடா, தென் ஆபிரிக்கக் கூட்டுறவு, ஆஸ்திரேலியா ஆகிய வெள்ளையர் குடியேற்றப் பகுதிகளே. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இதன் பின்னரே பொது வரசுக் காப்பகம் (**Commonwealth and Protectorate**) ஆயிற்று. ஆனால் தனியுரிமை (**Dominion Status**) பெற்ற குடியேற்றங்கள் மட்டுமே பொது வரசு என்ற சொல்லால் குறிக்கப்பட்டன. இந்திய ஏகாதிபத்தியப் பகுதியோ காப்பகம்என்ற சொல்லால் சுட்டப்பட்டது. காப்பரசின் உறுப்புக்கள் சார்பரசுகள் (**Dependencies**) என்று வழங்கப்பட்டன. இந்த இந்திய ஏகாதிபத்திய உறுப்புக்களிலும் முதன் முதல் வெள்ளையர் ஆட்சியிலேயே பிரிந்தவை ஏடனும் இலங்கையும் மலாயாவும் சிங்கப்பூருமே. **இப்பிரிவினைகள்தான் அவற்றின் சுதந்தரத்துக்கு வழி வகுத்தன** என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய ஏகாதிபத்தியத்திலிருந்து பிரிந்த சுதந்தர நாடுகளெல்லாம் போக, எஞ்சியுள்ள சுதந்தரம் பெருத பகுதிகள்கூட ஒரு தேசிய இனப் பரப்பல்ல என்பதை 'இந்தியக் கூட்டுறவு' (**Indian Union**) என்ற அதன் பெயரே சுட்டிக் காட்டுகிறது. காங்கிரஸ்காரர்களே பிரிட்டிஷார் விலகிய சமயம் அதை ஒரு தேசியக் கூட்டுறவு என்றுதான் கருதினர். ஒவ்வொரு பெரிய மாகாணமும் ஒரு தேசிய இனம் என்றே அவர்கள் கருதினர். விடுதலை இயக்கமாக நிலவியஅக்காலக் காங்கிரஸ்காரர் உள்ளப் பாங்கைச் சரிவரக் குறிப்பதானால், அவர்கள் தேசிய இனங்கள் என்று குறித்தது பிரிட்டிஷ் ஆட்சிக் கால மாகாணங்களையல்ல—அவை தேசிய அடிப்படையில் அமையவில்லையாதலால், காங்கிரஸ் அமைப்பு மொழி அடிப்படையிலேயே மாகாணங்களைத் தேசிய இனங்களாக வகுத்துக் கொண்டிருந்தது. ஆனால் விடுதலை இயக்கத்தின்போது கனவு கண்ட இந்த உண்மைத் தேசியம் இன்றைய ஏக இந்தியாவில் கைவிடப்பட்டுள்ளது. மொழியடிப்படையாக மாகாணம் வகுப்பதில்—தமிழகம், கன்னடம் ஆகியவற்றுக்கு மொழிப் பெயர் தருவதில்கூட- அவர்கள் தயக்கமும் மறுப்பும் காட்டுகின்றனர். அத்துடன் பிரிட்டிஷ் ஆட்சியில் மாகாணங்களுக்கிருந்த தன்னாட்சி, மாகாண சுயஆட்சி, உரிமையும் இப்போது பறிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தேசியக் கூட்டுறவு பெயரளவில்தான் இன்று தேசியக் கூட்டுறவாக அழைக்கப்படுகிறது. அது தேசிய உரிமைகளைக் காலடியிலிட்டு நசுக்கும் பிற்போக்கான கோரமான ஓர் ஏகாதிபத்தியமே என்பதை இவை காட்டுகின்றன. மாகாணங்கள் நாட்டாண்மைக் கழகங்கள் ஆக்கப்பட்டு, மைய ஆட்சி இன்று சர்வாதிகாரம் செலுத்துகின்றது.

காங்கிரஸ் இயக்கம் ஏற்பட்ட காலத்தில் இந்தியாவின் மாகாணங்களில் ஒன்ருக பர்மாவும் இயங்கிற்று. மற்ற மாகாணங்களுக்கு மாகாணக் காங்கிரஸ் இயங்கி வந்ததைப் போலவே பர்மாவுக்கும் ஒரு மாகாணக் காங்கிரஸ் (பர்மிய மாகாணக் காங்கிரஸ்) இருந்து வந்தது. பிரிந்துவிட்ட பாகிஸ்தானில் இன்னும் காங்கிரஸ் கட்சி வெளிநாட்டுக் கட்சியாய் இயங்குவதுபோன்றே பர்மாவில் அது இன்னும் இயங்குகிறது. இந்திய தேசியம் வலுப்பெற்ற காலத்தில் பர்மியர் தாம் இந்திய தேசியத்தின் ஒரு மாகாணமல்ல, தனித்தேசியம் என்பதை உணர்ந்து பிரிவினை கோரினர். பாகிஸ்தானை எதிர்த்தது போல,இப்போது திராவிடநாட்டை எதிர்ப்பதுபோல, காங்கிரஸ் அதை முழுமூச்சாக எதிர்க்கவே செய்தது.

இன்றைய திராவிடத்தில் முதலமச்சர் காமராசரும் அமைச்சர் சுப்பிரமணியமும், முன்னாள் காங்கிரஸில் மௌலானா ஆசாதும் காங்கிரஸுக்குள் திராவிட, முஸ்லிம் விபீஷணர்களாயிருந்து வந்துள்ளதுபோல, பர்மாவுக்குக்கூட அன்று பங்கி உத்தமர்போன்ற விபீஷணர்கள் காங்கிரஸ் ஆதரவாளராக இல்லாமலில்லை.

ஆனால் தேசியங்களின் சார்பில் கூட்டுத்தேசிய அமைப்பாகப் பிரிட்டனை எதிர்ப்பதில்தான் காங்கிரஸ் வெற்றிபெற முடிந்ததே தவிர, தேசிய இனங்களின் சுதந்தரப் போராட்ட எதிர்ப்புக்குமுன் அது என்றும் வெற்றி கண்டதில்லை, காணவும் முடியாது. ஏனெனில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும்போதுதான் காங்கிரஸ் இயக்கம் விடுதலை இயக்கமாகச் செயலாற்ற முடியும், தேசிய இனங்களை எதிர்க்கும்போது, அதுவும் ஏகாதிபத்தியமாய், தன் சொந்த உருவான ஏகாதிபத்திய வடிவம் பெற்று, உலகில் ஏகாதிபத்தியங்கள் அடைந்த, அடைய இருக்கிற கதியையே தானும் அடைய நேருகிறது. திராவிட தேசியத்தின் முன்னும் அது இதே வகைத் தோல்வி கண்டே தீரும்!

பர்மாப் பிரிவினையை இப்போது யாரும் நினைப்பதில்லை. 'பிரிட்டிஷார் பிரித்த பிரிவினைதான் பர்மாப் பிரிவினை, ஆகவே பர்மா ஒரு தனி நாடல்ல' என்று எந்த இந்திய ஏகாதிபத்தியவாதியும் இன்று கூற முடியாது. கூறமாட்டார். ஆனால் பாகிஸ்தான் வகையில் அவ்வாறு கூறினர். நாட்டைக் கூறு போடுவதா, தாயைச் சிதைப்பதா என்றெல்லாம் கூக்குரலிட்டுக் கதறினர், கேலிப் படம் போட்டனர். ஏகாதிபத்திய வடவர் மட்டுமல்ல, அவர்களின் தமிழகக் கூலிகள் கூடச் சிலேடைநயம்பட, சின்ன அவர்கள் செய்ய எண்ணும் 'சின்ன பின்னம்' பார் என்று படம் போட்டுப் பத்திரிகைக் கட்டுரைகள், நூல்கள் எழுதி எழுதிக் குவித்தனர். உலகப் பெரியார் காந்தியடிகள் முதற்கொண்டு, இஸ்லாமிய உலகப் பேரறிஞரான அபுல்கலாம் ஆஸாத் என்ன; பின்னாளில் பட்டாணிஸ்தான் கோரிய எல்லைப் புற காந்தி கபார்கான் என்ன, இத்தனை பேரும் சேர்ந்து எதிர்த்தார்கள். ஆனால் இந்திய ஏகாதிபத்தியம் ஒரு சிறு பூசலிட்டுப் பர்மிய தேசியத்தின் முன் தோற்றுவிட்டதுபோலவே, சிறிது பெருங் கூச்சலிட்டு ஆரவாரம் செய்து, தெரிந்தோ தெரியாமலோ தன்னுடன் சேர்ந்து கத்திய முஸ்லிம் விபீஷணர்களையும் பலியிட்டு, பாகிஸ்தான் தேசியத்தின் முன் பணிந்தது. அதனுடன் போட்டியிட்டு நாடு பிரித்துச் செயற்கைத் தேசியம் ஆக்கிற்று! உலக இயக்கமன்றித் தேசிய இயக்கப் பண்பு உணராத காங்கிரசில் வளர்ந்த உலகப் பெரியாரான காந்தியடிகளைக் கூடக் கைவிட்டு, அவரைப் பலிகொண்டு, காங்கிரஸ் ஏகாதிபத்தியம் பிரிவினைக்குப் பணிந்ததுடன் நில்லாது, அதையே தன் புதுத் தேசியகீதமாக்கிக் கொண்டது. அதன் பலனே புதிய ஏகாதிபத்திய சுயராஜ்யம்.

பிரிவினை அடிப்படையாகச் சுதந்தரம் பெற்ற தேசியம்தான் அது—இப்போது பிரிவினையா என்று சீறுகிறது!

திராவிடநாடு வகையில் பாரத பக்தர்கள் மற்றத் தேசியங்களை எதிர்த்துக் கூச்சலிட்டதுபோலக் கூச்சலிடக்கூடத் துணியவில்லை—அதன் உள்ளார்ந்த உயிர்த் தேசிய வலுவை அவர்கள் அக உள்ளம் உணர்ந்துள்ளது. திராவிட இயக்கத்தார்மட்டுமே உரத்துக்குரல் எழுப்புகின்றனர், நாவிலே!-பல காங்கிரஸ் தலைவர்கள், அறிஞர்கள் அதையே உள்ளத்திற்குள் வைத்துக் குமுறுகின்றனர் என்பது அவர்கள் அறியாததல்ல. திராவிட இயக்கம் பொதுமக்களிடையே வேகமாகப் பரவுவதும் அவர்களுக்குத் தெரியும். ஆனால் அவர்களின் ஒரே நம்பிக்கை மக்கள் உரிமைகளை விபீஷணர்கள் ஆட்சி மூலமாகவும், தேர்தல் சூழ்ச்சிகள்,சமரசப் பிரச்சாரங்கள் மூலமாகவும் மிதித்துத் துவைக்கலாம் என்பதும் திராவிடநாட்டுப் பிரிவினை நாளை எவ்வளவு நாள் முடியுமோ அவ்வளவு நாள் ஒத்திப் போடலாம் என்றும், அதற்கிடையே தென்னகச் சுரண்டலையும் ஆதிக்க வேட்டையையும் சாதிக்குமட்டும் சாதித்துக் கொள்ளலாம் என்பதுமேயாகும்.

—தொடரும்

★

— 5ம் பக்கத் தொடர்ச்சி —

செவிலியோ துடித்தாள். கோவென்று கதறியழுதாள். உற்றேரும்,மற்றேரும் ஓடிவந்தனர். உண்மையறிந்து அவளைத் தேற்றலாயினர். செவிலியின் கண்ணீர் நிற்கவில்லை. "ஐயகோ! சிறுவயதினிலே அவள்மீது ஒரு சிறு எறும்பும் ஊற விடாமல் பார்த்து, என்னமுதை அவளுக்கூட்டி, ஏதும் தெரியாத அரிவைக்கு அறிவையூட்டி; அவள் தவறு செய்த காலத்தும் வன்சொற்-கூருது, இன்சொல் கூறி வளர்த்தேனே. அதற்கோ என் மகள் எனை விடுத்துப் புறம் போனாள்" என்றெல்லாம் புலம்பினாள். துக்கத்தை மற்றவர்கள் ஆற்றவும் தேற்றவும் அறியாதவர்களாய் நின்றனர்.

★

பண்டைத்தமிழில் அகத்துறை நூல்கள் என்பன தமிழின் மாண்பை, தமிழர் பண்பாட்டை மக்களுக்குத் தெள்ளென விளக்கிக் காட்டுபவை. அகத்துறை இலக்கணம் என்றே தனியாக ஓர் வரைமுறை அமைத்த பெருமை தமிழ் மக்களுக்கே உரியது.

அகப்பொருள் விளக்கத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது "தஞ்சைவாணன் கோவை." அகத்துறையிலே "உடன் போக்கு" என்பது ஒரு துறை. தலைவனுடன் களவொழுக்கத்திற் கூடி வாழ்ந்த தலைவி அவனைப் பின்பற்றி தன் வீட்டைவிட்டு வெளியேறலையும் அதன் விளைவாக நற்றாயும், செவிலியும் வருந்துதலையும் எடுத்துரைப்பது அது. அதிலேதான் நாம் கண்ட செவிலி புலம்பலைப் பற்றி ஒரு பாடல் உள்ளது. அது இது:

"மாரு வளவயல்சூழ் தஞ்சை
வாணன்றென் மாறையென்கண்
ஆரு வருந்துயராற்று கின்றீ
ரறிவே கொளுத்தி
ஊருவன கடிந்தென்
முலையூறமிர் தூட்டி யின்சொற்
கூரு வளர்த்ததற் கோவென்னை
நீத்ததென் கோல்வளையே.

—திருப்பூர்- வாணி

★

வெண்பாப் போட்டி-7.

ஈற்றடி :

சாதியினல் தோன்றும் தடை.

முடிவு தேதி 16-11-57.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

கண்ணதாசன் நிகழ்ச்சிகள்

வலங்கைமான்

தஞ்சை மாவட்டம் - வலங்கைமான் தி. மு. க. சார்பில் 3-11-57 இரவு ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் அசன் முகமது அவர்கள் தலைமையில் ஆசிரியர் கண்ணதாசன், தோழர் அப்துல்லா, எஸ். ஆர். ராதா ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்கள்.

தஞ்சை மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து, தோழர்கள் கழகக் கொடிகளுடன் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். கூட்டம் இரவு 11 மணிக்கு முடிவுற்றது.

கும்பகோணம்

அன்று இரவு உதயசூரியன் நாடக மன்றத்தாரால், கும்பகோணத்தில் நடைபெற்ற 'இடிந்த கோட்டை' என்னும் நாடகத்திற்கு ஆசிரியர் கண்ணதாசன் தலைமை வகித்தார். தோழர் கே. கே. நீலமேகம், எஸ். எஸ். தென்னரசு ஆகியோர் நாடகத்தையும், நடிக நண்பர்களையும் பாராட்டிப் பேசியபின், கண்ணதாசன் விரிவுரையாற்றினார்.

அரியக்குடி- கழகத் துவக்க விழா

4-11-57 மாலை 4 மணி அளவில் காரைக்குடியை அடுத்த அரியக்குடியில் கொடியேற்று விழாவும், கழகத் துவக்க விழாவும் நடைபெற்றது.

ஆசிரியர் கண்ணதாசன் கொடியேற்றி வைத்தார்.

தோழர் தென்னரசு தலைமையில் ஆசிரியர் கண்ணதாசன் இயக்கக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்.

பொறியியல் கல்லூரி

அன்று மாலை ஐந்து மணியளவில் காரைக்குடி பொறியியல் கல்லூரி தமிழ்க் கழகத்தின் சார்பில் ஒரு இலக்கியச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. மன்றத்தலைவர் மாணவர் முத்துச்சாமி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். ஆசிரியர் கண்ணதாசன் 'கவிஞனும் பொருளும்' என்பது பற்றி ஒருமணி நேரம் பேசினார்.

கொடியேற்று விழா

6-30 மணிக்கு காரைக்குடி 4-வது வார்டில் தோழர் சி. மு. வேலன் தலைமையில் ஆசிரியர் கண்ணதாசன் கழகக் கொடியேற்றி வைத்தார். தோழர்கள் புவியரசு, இளமாறன் ஆகியோர் பேசினர்.

கலைவாணர் படிப்பகம்

7-30 மணிக்கு கலைவாணர் படிப்பகத் திறப்பு விழாவும் பொதுக்கூட்டமும் சிறப்பாக நடந்தேறியது. இரியன் பி. இ. அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.

தோழர்கள் இரா. தங்கவேலன், இளமாறன், புவியரசு ஆகியோர் பேசியபின் ஆசிரியர் கண்ணதாசன் கலைவாணர் பற்றியும், இந்தித் திணிப்பு பற்றியும் நீண்டதோர் உரையாற்றினர்.

காரைக்குடி நகரச் செயலாளர்-இலக்கியப்பண்ணை வேலன் அவர்கள் நகர் நிகழ்ச்சிகள் அனைத்திலும் கலந்துகொண்டார்.

சென்னை- பொறியியல் கல்லூரி

24-10-57 வியாழன் மாலை கிண்டி பொறியியல் கல்லூரி தமிழ் மன்றத்தின் சார்பில் ஓர் இலக்கியச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெற்றது. ஆசிரியர் கண்ணதாசன் 'படைப்பவன் கடவுள்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

பச்சையப்பன் கல்லூரி

1-11-57 மாலை சென்னை பச்சையைப்பன் கல்லூரி தமிழ் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற இலக்கியச் சொற்பொழிவுக் கூட்டத்தில் ஆசிரியர் கண்ணதாசன் 'படைப்பவன் கடவுள்' என்ற தலைப்பில் நீண்டஉரையாற்றினர். டாக்டர் மு. வரதராசனர், அன்புகணபதி ஆகியோரும், சட்டக்கல்லூரி, லயோலா கல்லூரி மாணவர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

பெங்களூரில் தமிழ் விழா

10-11-57 காலை 10 மணியளவில், பெங்களூரில்—சர் புட்டண்ண செட்டி டவுன் ஹாலில், திரு. டி. எம். வேதநாயகம் தலைமையில் தமிழ் விழா நடைபெறும்; திருமதி எஸ். கே. ஜெகதீஸ்வரி விழாவைத் துவக்கி வைப்பார்; தி.மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தோழர்கள் க. அப்பாதுரையார், ப. உ. சண்முகம் எம். எல். ஏ., கண்ணதாசன், டி. கே. சீனிவாசன், ஆர். எஸ். பாண்டியன் ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர். இசை: சேலம்-நித்தியானந்தன்; கலா நிகழ்ச்சி: அசோகன் குழு; வில்லுப்பாட்டு —'கலைவாணர் கதை'.

நவம்பர் இதழ் விற்பனையாகிறது!

இலக்கியத் திங்களிதழ்

ஆசிரியர் :-

கண்ணதாசன்

பன்மொழிப்புலவர் எழுதிய—

தமிழ்ப் பண்பு

தமிழ்ப்பண்பு பற்றிய விளக்கம் தரும் கட்டுரைக் கரும்பு.

தில்லை-வில்லாளன், எம். ஏ. தரும்—

இருள் விலகியது

இருளில் காதலித்து ஒளியில் இணைந்து நடந்த இருவர் கதை.

நா. பாண்டுரங்கன், எம். ஏ., தீட்டிய—

மலர்

எழில்நிறை இலக்கியக் காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டும் அருமையான கட்டுரை.

கண்ணதாசனின்

ஆட்டனத்தி-ஆதிமந்தி

ஆடற்கலைவல்லான் சேரன் அத்தி, சோழர்குலவிளக்கு ஆதிமந்தி, நாகைக்குமரி மருதி ஆகியோரின் கதை கூறும் காதல் காவியம்.

இவற்ருேடு

நினைவுகள்—இரா. இளஞ்சேரன்
செத்துப் பிழைத்தான்!—பி. டி. அந்தோணிராஜா, எம். ஏ., எம். எஸ்ஸி.
அன்பளிப்பு—வ. சம்பந்தன், பி. ஏ.
படராத கொடி—மு. சண்முகம்

மற்றும்

இரா. இரதிமணாளன், பி. காம்., இரா. கோதண்டராமன், தமிழ்ப்பித்தன், ரவி, ப. புகழேந்தி

ஆகியோரின்

எழுத்தோவியங்களோடு

'என் பாட்டை நான் கேட்டேன்'

—பிரபல பின்னணிப் பாடகி டி. வி. இரத்தினம் எழுதிய கட்டுரை.

மூவண்ண முகப்பு! ஏராளமான பக்கங்கள்

விலை அணா எட்டு

முல்லை :: சென்னை-6.

வெண்பாப் போட்டி

6. ஊடல் வெண்பா.

சூடினாள் வாசமலர்! தொட்டேன்; முகஞ்சுளித்தே
ஊடினாள் ஊடினாள் ஒண்டொடியாள்—நாடினேன்;
ஓடினாள்; ஓடினேன்; உட்கதவைத் தாளிட்டு
மூடினாள் மூடினாள் முகம்.

—டி. வி. பச்சையப்பன், மதுரை.

❁

'பெண்டாட்டி யோவிலங்கு பிள்ளையரோ சுள்ளாணி
என்றே இசைத்தபடி ஏந்திழையை—நான்தழுவ
"பண்டாரத் துக்கின்பம் பாவையிடம் உண்டோ?நீர்
சென்றுமடம் சேருமெ"ன்றாள் தேர்ந்து.

—வாத்தியார் முத்து, நாமக்கல்.

❁

பொய்யரென்றாள்! இக்கணமே போமென்றாள்! ஆர்வமுடன்
செய்தபிழை தானென்ன செப்பென்றேன்—மெய்வீரன்
என்றே உமைச்சொன்னீர் என்றுவ தென்னைநீர்
வென்றதுண்டோ என்றாள் விளித்து!

—அசோகன், பம்பாய்-17.

❁

நாவிரிநீர் வற்றாது; கன்னியென் காதலுளம்
பூவிரிந்து வாடுதல்போற் போகாது—பாவிரிந்த
செந்தமிழைக் காத்துவிட்டுச் சேதி அனுப்புங்கள்
தந்திடுவேன் என்னையே தான்.

—மதிவாணன், சென்னை-1.

❁

கிள்ளை மொழியாளைக் கிள்ளிநான் நள்ளிரவில்
மெள்ள ஒருசொல் முணுமுணுத்தேன்—துள்ளியவள்
"பிள்ளை நடப்பதற்குள் பிள்ளையினி ஏனெ"ன்று
தள்ளியே சென்றாள் தனித்து.

—குளிரெழிலன், சாலைப்புதூர்.

❁

பொங்கும் கலையழகே! பொன்மேனிச் சுந்தரியே!
கங்குல் நமக்காகக் காத்திருக்கும்—பைங்கிளியே!
ஊடியதின் நற்பயனாய் உண்டான ஆசையினால்
கூடி முயங்கிடலாம் கூறு.

—பொ. ந. கலியபெருமாள், மஞ்சைநகர்.

❁

தேனோடு பால்சேர்த்துத் தேமொழியாள் நான்கொடுக்க
ஏனோநீர் அப்பண்டம் ஏற்கவில்லை—மானேகேள்
பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்.

—வித்துவான் தி. கோலப்பன், நாகர்கோயில்.

❁

நேற்றிரவே நீபிரிந்தாய் நாங்கூழ்ப் புழுவாக
ஆற்றாதே நான்துடித்தேன் ஆருயிரே—ஏற்றிடுவாய்
உப்பமைந் தற்றால் புலவி யதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்.

—வள்ளிகாந்தன், காரமேடு.

❁

"ஊடாதே இன்பத்தேன் ஊற்றே! இடையொடிய
ஓடாதே!" என்றவளைக் கைப்பிடித்தேன்—"தேடாத
மாச்செல்வம் ஆனாலும் மங்கலநா ணேற்றிடுமுன்
பேச்சில்லை" என்றாள் பிரிந்து!

—காஞ்சி. காவியவாணன், பேரோடு.

❁

கண்ணகியின் பின்பிறப்பே! கற்கண்டே! அன்பெல்லாம்
உண்மையாய் உன்மீது என்றிட்டேன்;—மண்மீதில்
அன்புக்கு நானென்றால் ஆசைக்கு யாரென்றே
என்னுட(ன்) ஊடினாள் இன்று.

—இல. சுப்பிரமணியன், புளியங்குளம்.

❁

அன்பொழுகப் பேசிடினும் அள்ளியள்ளித் தந்திடினும்
இன்முகத்தைக் காட்டி இடர்நீக்காள்—தன்மனம்போல்
வாட்டி வருத்திடுவாள்; வாட்கண்ணார் தம்ஊடற்
கோட்டை தகர்த்த லரிது!

—குகன் குருசாமி, கழுகு

❁

மூன்றாண் டிருந்திரே, மூச்சடக்கி என்அத்தான்!
மூன்றுநாள் இன்னும் பொறுமென்றேன்;—மூன்றென்ன
மூன்றே டினுமூன்று பின்மூன்று மூன்றாண்டும்
வேண்டாமே என்றார் வெதும்பி!

—பூ. பொன்னையா, திருச்சி.

❁

கொஞ்சிக் களித்திருக்கக் கூப்பிட்டேன்; என்னில்லாள்
கொஞ்சமும் கேட்காமற் கோணிட்டாள்—அஞ்சாமல்
மோதினாள் என்னிடமே! "வாடுகின்றேம் கஞ்சியின்றி!
காதலோ?" என்றாள் கசந்து.

—அ. இசுமாயில், மேலப்பாளையம்.

❁

"மாத்தமிழுக் கிடில்லை மாதுசுக மென்றுகவி
'யாத்தவ'ரை யோபடித்தீர்? யான்விழையேன்—பாத்தலையில்
பூத்தவிழும் இன்பம் பெரிதென்றால் போ"மென்று
சாத்தித்,தாள் போட்டாள் சலித்து!

—சோமு. இளங்கோவன், மதுரை.

❁

முற்றுந் துறந்தார்க்கும் மூட்டிவிடும் நோயன்றோ!
விற்கும் பொருள்தானோ! வேறெங்கு—பெற்றிடுவேன்
ஆடகப் பெண்ணணங்கே ஆடிடு தென்நெஞ்சம்
ஊடல் தவிர்ப்பாய் உடன்.

—அருள்செல்வன், அரு

❁

வேற்றூர்க்குச் சென்றிருந்து மீண்டேன்; ஊனதுடிப்பை
மாற்றினாள்; என்னை மருவினாள்!—நேற்றெல்லாம்
உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.

—சே. ஆ. முத்துக்குமரன், சேலியமேடு.

❁

வட்டநிலாச் சுட்டாலும் வானின்பந் தந்தாலும்
கட்டழகி நானுன்னைக் கைவிடேன்—இட்டமுடன்
கட்டியணைத் தின்புறுவோம் காரிகையே! ஊடலினை
விட்டொழித்தே வாராய் விரைந்து.

—திராவிடப் பித்தன், கருப்பட்டிபாளையம்

❁

முத்தே!நல் வான முழுநிலவே! உன்முகத்தைப்
பொத்தினாய் கையால்; பொறுப்பேனோ?—அத்தானே!
ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

—இரா. பரமசிவம், கடலூ

❁

வேலை நிமித்தமதாய் வேற்றூர்நான் செல்லுகின்றேன்
காலையிலே காண்போம்நா மென்றுரைத்தேன்—கோலமயில்
வட்ட மதிகண்ட வண்ண மரையிதழ்போல்
எட்டி நடந்தனளே யேன்?

—பா. சு. மணியம், முத்து

❁

கன்னமதைக் கிள்ளிவிட்டு, கள்முத்தம் ஒன்றீந்து
இன்னமுதே! தந்திடுவாய் இன்பமென்றேன்!—மென்னகையு
குத்துமீசை நீர்முதலில் கொய்திடுவீர், பின்பேதான்
முத்தமெலாம் என்றாள் முனிந்து!

—க. தங்கவேலன், சேர்வைத்

❁

"தேடக் கிடைக்காத செம்பொன்னே! உன்மேனி
வாடிக் கிடப்பதேன் வந்துரைப்பாய்!"—"சேடி!
மனதைக் கவர்ந்திட்ட மன்னவன்தா னென்னை
நினையா திருந்தான் நினை"

—மாயாண்டி, தண்ட